# மார்ச்சில் பொதுத்தேர்தல்; பெப்ரவரி இறுதியில்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 340
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் தை 6 ஜூலகஃ 10 திங்கட்கிழமை [19-1-70]


## ஆட்சிமன்றம் கலையும்?

கோட்டை, ஞாயிறு
அடுத்த பொதுத் தேர்தல் மிகவிரைவில் நடைபெறவிருப்பதாக பிரதமருடன் நெருங்கிய அரசியல் வட்டாரங்களின்லிருந்து அறியப்படுகிறது.

அடுத்தமாதம் அதாவது பெப்ரவரி மாத இறுதியில் ஆட்சிமன்றம் கலைக்கப்படுமென்றும் மாத இறுதியில் பொதுத் தேர்தல் நடைபெறுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அநேகமாக மார்ச் 31-ந் திகதிதான் வாக்களிப்புத் தினமாக இருக்குமென்றும் கூறப்படுகிறது.

ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டு மிகக்குறுகியகால இடைவேளைக்குள் பொதுத் தேர்தலை நடத்துவதுதான் பிரதமரின் திட்டமென்றும் மிக விரைவில் பொதுத் தேர்தலை நடத்துவதால் ஆளும் கட்சிக்கு அதிகசாதகமான நிலையிருக்குமென்று ஆளும்கட்சியினர் கருதுவதாகவும் அறியப்படுகிறது.

## 65 ஏக்கர் நிலத்தில்
# அச்சுவேலியில் ரூ.90 லட்சம் செலவில் கைத்தொழிற் பேட்டை

### விபத்தில் தப்பினர்

புலோலி, ஞாயிறு
வவனியாவிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த பிரயாணிகள் வான் ஒன்று முருகண்டியில் வீதியை விட்டுவிலகிப் பள்ளத்தில் பாய்ந்ததாகவும் தெய்வாதீனமாக இவ்விபத்தில் யாருக்கும் படுகாயமெதுவும் ஏற்படவில்லையென்றும், இவ்வானில் பிரயாணம்செய்த நிறைமாதக் கர்ப்பிணி ஒருவருக்கு வலி காணவே அவர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுப் பின் அங்கு பிரசவித்ததாகவும் தெரியவருகிறது.

#### தாழ்வுப்பாடு இராணுவ இரட்டைக் கொலை
## சந்தேக நபர்கள் 8 பேர் விடுதலை

மன்னார், ஞாயிறு
தாழ்வுப்பாடு இராணுவ இரட்டைக்கொலை சம்பந்தமான விசாரணை கடந்த வெள்ளியன்று ஆரம்பமானபோது நீதவான் சந்தேக நபர்கள் எட்டுப்பேரை விடுதலை செய்தார்.

மன்னார் கோர்ட்டில் புதிய நீதவான் திரு. திஸநாயக்காவின் தலைமையில் வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது இருவர் சாட்சியமளித்தனர். கோர்ட்டைச் சுற்றி ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

பிரஸ்தாப 8 பேர் மீதான குற்றச்சாட்டை பொலிசார் வாபஸ் பெற்றனர். மிகுதி 13 பேர் மீதும் 7 குற்றச் சாட்டுகளைத் தொடுத்துள்ளனர்.

சென்ற ஆண்டு டிசம்பரில் தாழ்வுப்பாட்டில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த இரு இராணுவத்தினரைக்கொலை செய்தது, கொலையை சம்பந்தமாக மறைத்துவைத்தது, கொலைக்கு உடந்தையாக இருந்தது போன்ற குற்றங்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

விடுதலை செய்யப்பட்ட எண்மரில் ஒருவரான செபஸ்தியான் சந்தியாகு குரூஸ் என்பவரைப் பொலிஸ் தரப்பு வழக்கறிஞர் குறுக்குவிசாரணைக்கு உட்படுத்தவே இதனை திரு வி. ஏ. அழகக்கோன் ஆட்சேபித்தார் விடுதலையானவரை விசாரிக்க முடியாது என்று அவர் கூறினார். ஆயினும் நீதவான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இராணுவ காப்டன் திரு. சின்னத்தம்பி சாட்சியமளித்தார். அவ்வமயம் களவுபோன துப்பாக்கி அடையாளம் காட்டப்பட்டது.

மேல்விசாரணையை நீதவான் அடுத்தமாதம் 2-ம் திகதி ஒத்திவைத்தார்.

## 'மகாவலித் திட்டம் நாட்டுக்குப் பயனளிக்கும்'
### கொழும்பில் இந்திய அமைச்சர்

கொழும்பு, ஞாயிறு
''மகாவலி கங்கை திசை திருப்பும் திட்டம் நாட்டுக்கு மிகவும் பயனளிக்கக் கூடிய திட்டமாகும். இத் திட்டம் பூரணத்துவம் பெற்ற பிறகு உணவு, மின்சாரம் போன்ற நாட்டின் சுயதேவைகள் பூர்த்தியாகிவிடும்''

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய நீர்ப்பாசன அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் இன்று அலரி மாளிகையில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மற்றலை செய்யலாமென்று யோசனை தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையில் 'கேபிள்'கள் அமைத்து மின்சாரத்தை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு மின்சாரம் விநியோகிக்கலாமென்று டாக்டர் ராவ் தெரிவித்தார்.

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலங்களிலும் 'கேபிள்'கள் மூலம் இப்படியான மின்சார விநியோகம் நடைபெறுகிறதென்றும் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்குமிடையில் 'கேபிள்'கள் மூலம் மின்சாரம் விநியோகிக்கப் படுகிறதென்றும் ஐரோப்...

பெப்ரவரி 7-ல்
### உயர் நீதி மன்ற விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணம் உயர் நீதி மன்றப்பருவ விசாரணை அடுத்த மாதம் 7-ம்திகதி ஆரம்பமாகவிருக்கின்றது.

பருவகால நீதியரசராக திரு. சி. ஜி. வீரமந்திரி கடமையாற்றுவார். சுமார் 20 வழக்குகள் இப்பருவகாலத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். (கா. நி)

### மேயர் பதவி பிரச்னை

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாண நகர மேயர்

## அமைச்சர் பிலிப் குணவர்த்தன இன்று ஆரம்பித்துவைப்பார்

(நமது காரியாலய நிருபர் 'திரு')

வடக்கில் வசிக்கும் தமிழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான கைத்தொழில் பேட்டை அச்சுவேலியில் 65 ஏக்கர் நிலத்தில் 90 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவிருக்கின்றது. இக்கைத் தொழில்பேட்டையின் பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்து வைப்பதற்காக கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இன்று காலை யாழ்ப்பாணம் வருகின்றார்.

வடக்கிற்கு மூன்று நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இன்று காலை யாழ்ப்பாணம் வரும் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சருக்கு [illegible] நிலையத்தில் மகத்...

அமைச்சரின் மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் மேலும் சில விஜயங்கள் கடைசி நேரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. முன்னரே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்குப் பின்னர் கோப்பாய் கண்ணடைக் தொழிற்சாலை...



## சென்னை தீவிபத்தில் 5 குழந்தைகள் பலி

சென்னை, ஜன. 18
சென்னை மைலாப்பூர் பகுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் 5 குழந்தைகள் எரிந்து பலியானதாகத் தெரிகிறது. குடிசையில் தீ பிடித்தபோது உள்ளே இருந்த குழந்தைகள் வெளியில் வர முடியாமல் போனதே இவர்கள் பலியானதற்கு காரணம் என்று தீயணைக்கும் படையினர் கூறுகிறார்கள்.

தமிழ் நாட்டில் வேறொரு... 33 குடிசைகள் எரிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மேலும் குழப்பங்கள் ஏற்படாமல் தடுக்க ஸ்தலத்துக்குப் பொலிசார் விரைந்துள்ளனர். பொலிஸ் கமிஷனரும் ஸ்தலத்துக்கு விரைந்து சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து முதலமைச்சர் பெரிதும் அதிர்ச்சியடைந்திருக்கிறார் சம்பவம் நடந்த இடத்துக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ள இந்திய நீர்ப்பாசன அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் இன்று அலரி மாளிகையில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் டாக்டர் கே. எல் ராவ் மேலும் பேசுகையில் இலங்கை இந்தியாவுக்கிடையில் ஜலமின்சார பரி...கள் மூலம் இப்படியான மின்சார விநியோகம் நடைபெறுகிறதென்றும் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்குமிடையில் 'கேபிள்'கள் மூலம் மின்சாரம் விநியோகிக்கப் படுகிறதென்றும், ஐரோப்பாவில் பதினெட்டு நாடுகளில் இந்தத் திட்டம் நடக்கிறதென்றும் இந்திய அமைச்சர் தெரிவித்தார்.

## சுருட்டு கம்பனிகளில் சம்பள உயர்ச்சி மறுப்பு; தொழிலாளர் வெளிநடப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தீர்மானப்படி 1000 சுருட்டுக்கு 15 ரூபா சம்பளம் கொடுக்க மறுத்த தாவடியிலுள்ள சுருட்டுக்கம்பனிஒன்றில் தொழிலாளர்கள் இன்று வெளிநடப்புச்செய்தனர். சங்கத்தலைவர் திரு, ஆ. துரைராசசிங்கத்தின் தலைமையில் சென்ற சங்க நிர்வாகிகள் குழுவொன்று உற்பத்தியாளரைக் கண்டு பேச்சுவார்த்தை நடத்தியது.

ரூபா 15 சம்பயம்கொடுக்கும்வரை வேலைக்குத் திரும்புவதில்லையென இவர்கள் முடிவு செய்துள்ளனராம். குறிப்பிட்ட தொகை சம்பளம் வழங்க மறுக்கும் கம்பனிகளிலிருந்து தொழிலாளர்களை பகிஸ்கரிக்கும்படி மேற்படி சங்கம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது பல முதலாளிமார் சம்பள உயர்ச்சி வழங்கியுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

## இன்று நாகா; நாளை ஜி. ஜி.; கமிஷன் முன் சாட்சியம்

யாழ்ப்பாணம். திங்கள்

இலங்கையின் மூன்ருவது பல்கலைக்கழகத்தை வடக்கிலா, கிழக்கிலா நிறுவுவது என்பது பற்றி ஆராய நிறுவப்பட்டிருக்கும் விசாரணைக் கமிஷன் மூலம் இரண்டு தமிழ் எம். பிக்கள் இன்றும் நாளையும் சாட்சியமளிப்பார்கள்.

தமிழரசுக்கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் இ. எம். வி. நாகநாதன் இன்று சாட்சியமளிப்பார். பல்கலைக்கழகத்தைகிழக்கில் அமைக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வற்புறுத்துவார்.

நாளை தமிழ்காங்கிரஸ்தலைவர் திரு ஜி. ஜி பொன்னம்பலம் பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன்முன் சாட்சியமளிப்பார்.

பல்கலைக்கழகத்தையாழ்ப்பாணத்தில் அமைக்கவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டுவதுடன், அதற்கென இருக்கும் சொத்துக்கள் பற்றிய விபரங்களையும் திரு. பொன்னம்பலம் தமது சாட்சியத்தில் எடுத்துக்கூறுவார். (கா நி)

## காங்கிரஸைப் பலப்படுத்த எடுக்கும் நடவடிக்கை

புதுடில்லி, ஜன. 18

ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஜகஜீவன்ராம் தலைமையில் காங்கிரஸ் காரியக்கமிட்டிகூடி கட்சியைப் பலப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி தீர்மானம் எடுத்துக்கொண்டது.

பகுதிநேரம் முழுநேரம் கட்சிவேலைசெய்வதற்கு-விசுவாசமுள்ள ஊழியர்களை நியமிப்பதென்று முடிவு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும்வாரசஞ்சிகைகளை ஆரம்பித்துகட்சியின் கொள்கைத் திட்டங்களை பிரசாரப்படுத்துவதென்று, மாநிலங்களில் அந்தந்த மொழிகளில் பத்திரிகைகளை வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## திருமால் விக்கிரக ஊர்வலம்

மாவிட்டபுரம், திங்கள்

பிரமாண்டமான முறையில் கருங்கல்லினுல் செய்யப்பட்ட திருமால் அனந்தசயன விக்கிரக ஊர்வலம் இன்று மாவிட்டபுர தேவஸ்தகன மண்டபத்திலிருந்து புறப்பட்டது.

முழுக்க முழுக்க கருங்கல்லில் சிற்பவேலைப்பாடுகளுடன் பிரபல சிற்பாசிரிய திரு, பெரியசாமி ஆச்சாரியரால் இவ்விக்கிரம் செய்யப்பட்டது.

## மேயர் பதவி பிரச்னை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நகர மேயர் திரு சி நாகராஜா, மேயர்பதவியை இம்மாத இறுதியில் ராஜினமாச்செய்வாரென்று மாநகரசபை வட்டாரங்களில் சில பகுதிகளில் பேச்சடிபடும் அதே சமயம் திரு நாகராஜாபதவியைத் துறந்தால், ஆளும் கட்சி நினைப்பதற்குமாருகச் சில சம்பவங்கள் நிகழலாமென்ற அச்சமும் ஆளும்கட்சி வட்டாரத்தில் நிலவுகிறது. இந்நிலையில்திரு. நாகராஜாவைபதவி துறக்காமல் செய்வதற்கான இறுதிநேர முயற்சியும்நடைபெறுவதாகத் தெரிகிறது.

## பஸ்சேவை

புலோலி, ஞாயிறு

பருத்தித்துவற — யாழ்ப்பாணம் சேவையிலீடுபடும் பஸ்கள் சரியான நேரத்திற்குச் சேவையில் இல்லாததால் இப் பகுதியில் பஸ் பிரயாணிகள் பெரிதும் சிரமமடைகின்றனர்.

பலமணி நேரம் பஸ்தரிப்பு நிலையத்தில் பிரயாணிகள் காத்திருக்கவேண்டியிருக்கிறது. அரசாங்க ஊழியர்களும் இதனுல் பெரிதும் பாதிக்கப்படுகின்றன ராம்.

4-வது டெஸ்டில்

## இலங்கை: 296-9

கல்கத்தா, ஜன. 18

இலங்கை மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்கும், பாரத மாணவர் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் கல்கத்தாவில் நடைபெறும் 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-வது நாளான இன்று இலங்கை மாணவர் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 296 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இன்றைய ஆட்டம் முடியும் போது பாரதக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் விக்கெட் நஷ்டமின்றி 19 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 181 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

...வடக்கிற்கு மூன்று நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இன்று காலை யாழ்ப்பாணம் வரும் கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சருக்கு பலாலி விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பளிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன அமைச்சரின் மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் மேலும் சில விஜயங்கள் கடைசி நேரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்குப் பின்னர் கோப்பாய் கண்ணுடித் தொழிற்சாலை, யாழ்ப்பாணம் வசந்தா



...சேலை அச்சகம் ஆகிய வற்றிற்கு விஜயம் செய்வது சேர்க்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் இன்றைய நிகழ்ச்சிகள்:

9-30 மணி: யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள இன்டஸ்றியல் என்ஜினியரிங் தொழிற்சாலைக்கு விஜயம் செய்தல்.

10 மணி. யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் மாநாடு.

4 மணி: கோப்பாய் கண்ணுடித் தொழிற்சாலைக்கு விஜயம்

4-30 மணி அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் பூர்வாங்க வேலைகளை அமைச்சர் ஆரம்பித்து வைப்பார். அமைச்சருக்கு அச்சுவேலியில் அமோக வரவேற்பளிக்கப்படும்.

இங்குவரும் அமைச்சர் நுழை வாசலில் இருந்து பாடசாலை மாணவ மாணவிகள் அணிவகுத்து நிற்க பாண்ட் வாத்திய இசை, நாதஸ்வர இசை ஆகியவைகளுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

இக் கைத்தொழில் பேட்டை அச்சுவேலிசெல்வநாயகபுரம் குடியேற்றத் திட்டத்திற்கு அருகாமையிலுள்ளது. இப்பேட்டைக்கான அத்திவாரக்கல்லை கைத்தொழில் இலாகா உதவி அதிகாரி திரு. எல்லாவல் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் நாட்டினுர்.

அச்சுவேலி குடியேற்றத் திட்டத்திற்கு கிழக்குப்பகுதியில் உள்ள 65 ஏக்கர் நிலத்தில் அமையும் இக் கைத்தொழில் பேட்டை 90 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும்.

35 கட்டிடங்களைக் கொண்டதாக அமைக்க திட்டமிடப்பட்ட இப்பேட்டை வேலைகளை 3 கட்டமாகச்செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி முதற்கட்டமாக 10 கட்டிடங்கள் 7800 சதுர அடியில் அமைக்கப்படுகிறது. இதற்கான பூர்வாங்க வேலைகளையே அமைச்சர் ஆரம்பிக்கிருர்.

இக்கட்டிடங்களுக்குமின்சாரம், தொலைபேசி வசதிகளை அரசாங்கம் அளிப்பதுடன் தபால் நிலையம், வங்கி, சிற்றுண்டிச்சாலை, வேலைத்தளம், தீயணைப்புப்படை தொலைபேசிநிலையம் (எக்சேஞ்) ஆதியனவும் அரசாங்கத்தால் அமைக்கப்பட விருக்கிறது.

இக்கைத்தொழில் பேட்டை அமைத்து முடிந்ததும் வடக்கில் நிலவும் வேலை இல்லாத்திண்டாட்டம் ஓரளவுக்கு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (மாவி நிரு)

29-ந் திகதி வரும்

## அமைச்சர் பிரேமதாசா வடக்கில் 4 நாள் நிற்பார்

யாழ்ப்பாணம், திங்கள்

நான்கு நாள் உத்தியோக பூர்வமானவிஜயத்தை முன்னிட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா இம்மாதம் 29-ம்திகதி வடக்கே வருகின்ருர்.

29-ம்திகதி காலை 8-15 மணிக்கு பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கும்அமைச்சரை அரசாங்கஅதிபர், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகள் வரவேற்பார்கள்.

அன்றுமாலையாழ்ப்பாணம் மாநகரசபையினுல் நகர மண்டபத்தில் பொது வரவேற்பு அளிக்கப்படுவதோடு இராப்போசன விருந்தும் வழங்கப்படும்.

29-ம்திகதி யாழ்ப்பாணம் செயலகம், யாழ்ப்பாணம் மாநகரசபை, மானிப்பாய் பட்டினசபை, மானிப்பாய் கிராமசபை, சுன்னுகம் பட்டினசபை ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வார்.

30-ம்திகதி பூநகரி கிராமசபை, பல்லவராயன்கட்டு கிராமசபை கச்சாய் கிராமசபை, கைதடி கிராமசபை, கோப்பாய் கிராமசபை நெல்லியடி, கரவெட்டி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வார்.

31-ம்திகதி வேலணைக்கிராமசபை, ஊர்காவற்றுறை பட்டினசபை, கொக்குவில் கிராமசபை, நல்லூர் கிராமசபை, மல்லாகம்கிராமசபை தெல்லிப்பளைக் கிராமசபை, பன்னுலை, ஏழாலைக்கிராமசபை ஆகியஇடங்கட்கு விஜயம் செய்வார்.

அடுத்த மாதம் 1-ம்திகதி அச்சுவேலிக்கிராமசபை, வல்வெட்த்துறைப்பட்டினசபை பருத்தித்துறைநகரசபை சங்கானை பட்டினசபை, அராலிக்கிராமசபை, வட்டுக்கோட்டைக்கிராமசபை ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்த பின் அன்றிரவே விமானத்தில் கொழும்பு திரும்புவார். (கா. நி)

யாழ். மறியல்சாலையில்

## கைதிகள் சண்டை ஒருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், திங்.

இரண்டு கைதிகளுக்கிடையே நடைபெற்றதாகக் கூறப்படும் குத்துச் சண்டையொன்றில் ஒரு கைதி படுமோசமாகத் தாக்கப்பட்டாராம்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மறியல்சாலையில் நடைபெற்றதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

காயங்களுக்குள்ளான விஜயேந்திரா என்ற (26 வயது) நீண்டநாள் கைதியே தாக்குதலுக்குள்ளாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக மறியல்சாலை அதிகாரிகள் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னரும் கூட இதே மறியல்சாலைக்குள் இரண்டு கைதிகளுக்குள் நடைபெற்ற கைகலப்பில் ஒரு கைதி மரணமானதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (கா, நி)

## கல்விஅமைச்சரை சந்தித்தது

கொழும்பு, ஞாயிறு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தூதுகோஷ்டி இன்று கல்விஅமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையைச் சந்தித்து பேசியது.

தோட்டப்பாடசாலைகள் சம்பந்தமாக கல்விஅமைச்சரிடம் கோரிக்கைகளை விடுத்தனர்.

திரு. அண்ணுமலை எம். பி. செனட்டர்ஜேசுதாசன், ஆகியோர் தலைமையில் இத்தூது கோஷ்டி கல்வி அமைச்சரை சந்தித்தது

குடிசையில் தீ பிடித்தபோது உள்ளே இருந்த குழந்தைகள் வெளியில் வர முடியாமல் போனதே இவர்கள் பலியானதற்கு காரணம் என்று தீயணைக்கும் படையினர் கூறுகிருர்கள்.

தமிழ் நாட்டில் வேருெரு இடத்தில் ஹரிஜனங்களுக்கும் ஹரிஜனமல்லாதவர்களுக்குமிடையில் ஏற்பட்ட தகராறில் பல குழந்தைகள் எரிந்து சாம்பலாகியுள்ளன. இந்தத் தகராறில் 5 பேர் பலியாகியிருக்கிருர்கள் ஹரிஜனங்களின் குடிசையொன்றை எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஹரிஜனமல்லாதவர்களின் ...துக்குப் பொலிசார் விரைந்துள்ளனர். பொலிஸ் கமிஷனரும் ஸ்தலத்துக்கு விரைந்து சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து முதலமைச்சர் பெரிதும் அதிர்ச்சியடைந்திருக்கிருர் சம்பவம் நடந்த இடத்துக்கு சில அமைச்சர் ஒருவரை விரைந்து செல்லும்படி முதல்வர் பணித்திருக்கிருர்.

கலவரத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து 100 ரூபா வழங்கவும், வீடுகளை இழந்தவர்கள் வீடு கட்டிக்கொள்ளவும் முதலமைச்சர் உடனடியாக ஏற்பாடுகள் செய்துள்ளார்.

தமிழ் காங்கிரஸ் மாநாடு

## யாழ்ப்பாணக்கூட்டம் ரத்து; மற்றும்நிகழ்ச்சிகள் நடக்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டையொட்டி இம்மாதம் 23-ம் தேதி இரவு யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் மட்டும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. மற்றும் மகாநாட்டு நிகழ்ச்சிகள் ஏற்கனவே தீர்மானித்தபடி இம்மாதம் 21-ம் 22-ம் 23-ம் தேதிகளில் சாவகச்சேரியில் நடைபெறும்.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நேற்று நடந்த கமிட்டிக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. இக் கூட்டத்தில் மாநாட்டு ஊர்வலங்கள் நிகழ்ச்சிகள்பற்றி முடிவு எடுக்கப்பட்டன.

தமிழ் காங்கிரஸ் வெள்ளி விழாவை இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடவிருப்பதாலேயே யாழ்ப்பாணக் கூட்டம் ரத்துச்செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் 21ம் திகதி காலை அரசியல் மகாநாடு. பிற்பகல் 2 மணி தீர்மானங்கள். 6 மணி கதம்ப நிகழ்ச்சி.

22ம் திகதி காலை வாலிபர் மகாநாடு பிற்பகல் 2 மணி தொழிற்சங்க மகாநாடு இரவு 6 மணி பொதுக்கூட்டம் 23ம் திகதி காலைமாதர் மகாநாடு.

22ம் தேதி பிற்பகல் 2 மணிக்கு ஊர்வலங்கள் ஆரம்பமாகி 'தாமோதரம் அரங்கை' வந்தடையும். வரணி, எழுதுமட்டுவாள், உசன், மிருசுவில், கச்சாயிலிருந்து புறப்படும் ஊர்வலங்கள் கொடிகாமம் சந்தியை வந்தடையும். கைதடி, சரசாலை, மட்டுவில், தனன்கிழப்பு. மறவன்புலோ, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு, நாவற்குழியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலங்கள் நுணுவில் சந்தியை வந்தடைந்து, அங்கிருந்து சாவகச்சேரியை வந்தடையும்.

மகாநாட்டிற்கான பந்தல் அமைக்கப்பட்டுவிட்டது. மகாநாட்டையொட்டி 3 தினங்களும் 50 விசேஷ பொலிசார் கடமையாற்றுவார்கள் என்றும் பந்தல் அருகே 'பொலிஸ்போஸ்ட' ஒன்று நிறுவப்படுமென்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ளதாக கமிடடிக் கூட்டத்தில் கூறப்படடது.

யாழ்ப்பாணம், ஞாயிறு

கள்ளக்கடத்தல் என்றுசந்தேகிக்கப்படும் 23 சேலைகளை யாழ்ப்பாண நகரிலுள்ள வழக்கறிஞர் ஒருவரின்வீட்டிலிருந்து பொலிசார் நேற்றுக் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் திரு. வறகொட தலைமையில் சென்ற பொலிசாரே இதனைக் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

### தேவை

தண்ணீரூற்றில் உள்ள ஓர் டியூட்டரியில் ஆங்கிலம் மற்றும் விஞ்ஞான பாடங்கள் போதிக்கக்கூடிய ஆசிரியை ஒருவர் உடன் தேவை. விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசதாரரை நேரில் சந்திக்கவும். சோ. இராசையா, தண்ணீரூற்று. முள்ளியவளை. 1775

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 19—1—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30, பகல் 12-00, 1-30. மாலை 4-25, 6-00. இரவு 7-00, 8-00, 9-00, 10-30

திரைகானம்: காலை 7-30 பகல் 12-03, 1-00. மாலை 6-10 முத்திநெறி. இரவு 7-15 சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம் — என். கே. பத்மநாதன்.

## தற்காலிக ரத்து

அளவெட்டி, ஞாயிறு

அளவெட்டி வடக்கு ஞானோதய வித்தியாசாலையைத் தரம் குறைக்கும் முயற்சி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இத்தகவலைக் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மேற்படி பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு. இ. செந்திவேலுக்குத் தந்திமூலம் அனுப்பிவைத்துள்ளார்.

இதுசம்பந்தமாக மேற்படி பெற்றோர் ஆசிரியர் சங்கம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடனும், வடபகுதிக் கல்வியதிகாரியுடனும் தொடர்பு தொண்டதைத் தொடர்ந்தே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## புதிய அதிபர்

சுன்னாகம், ஞாயிறு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிப் புதிய அதிபராக திரு. எஸ். ஏகாம்பரநாதன் பதவி ஏற்றுள்ளார். மட்டக்களப்பு வந்தாறுமூலை மகாவித்தியாலய அதிபராக இருந்து ஸ்கந்தாவுக்கு இடமாற்றம் பெற்றுள்ள இவர் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் பழையமாணவராவர்.

## வரணிக் கிராமச்சபையின் கேள்விவிளம்பரம்

வரணிக் கிராமச்சபையின் கந்தோர் கட்டடத்திற்கு 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் திகதி பிற்பகல் 3 மணி வரை வரணிக் கிராமச் சபை அக்கிராசனரால் "சீல்" வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரப் பிணைப்பணம் ரூபா 25/-ம் போம் பணமாக ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் 25-1-70-ம் திகதி பகல் 12 மணி வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்குக் கேள்வி விளம்பரத்தைப் பார்க்கவும்.

க. முருகேசு,
அக்கிராசனர்,
வரணிக் கிராமச்சபை
வரணிக் கிராமச் சபை.
16-1-70. 1915

## அறிவித்தல்

யாழ்ப்பாண உபமின் நிலையத்திலிருந்தும் நல்லூர் உபமின் நிலையத்திலிருந்தும் பயனடையும் மின் பாவனையாளர்களுக்கு,

மேற்படி உபமின் நிலையங்களுடன் தொடர்புள்ள மின் இணைப்புப் பாதைகளில் அத்தியாவசிய சில வேலைகள் செய்யவேண்டி யிருப்பதால் 1970-ம் ஆண்டு தை மாதம் 22-ம் திகதி காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் காலநிலை திருப்தியாகஇருந்தால், மின்சார விநியோகம் தடைப்படுமென்பதை மேற்படி பாவனையாளர்களுக்கு அறியத்தரப்படுகிறது:

மேலும் மின்சார வீதிக்கும், பஷார் வீதிக்கும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையிலும் மின்சார விநியோகம் தடைப்படும்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
18-1-70 1917

## வேலைநீக்க அறிவித்தல்

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தோட்டவெளி, ஓலைத்தொடுவாய், மேத்தன் வெளி ஆகிய பகுதிக் கிராம சேவையாளர்களுக்குச் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக வேலைநீக்க அறிவித்தல் கடிதம் மன்னார் அரசாங்க அதிபரால் அனுப்பப்பட்டுள்ளது.

அ. இ, சைவசமய பாடப்பரீட்சை

# அகில இலங்கைப்பரிசு பெறும் மாணவர் விபரம்

கோட்டை, ஞாயிறு

கொழும்பு விவேகானந்த சபையாரால்1968-ம்ஆண்டு நடாத்தப்பெற்ற அகில இலங்கை சைவசமய பாடப் பரீட்சையில் கீழ்க்காணும்மாணவர்கள் அகில இலங்கைப் பரிசில் பெற்றுள்ளார்கள். மேற்பிரிவு 1, 2-ல் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளவர்கட்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படும். ஏனையோருக்குப் புத்தகப் பரிசில்கள் வழங்கப்படும்.

பாலர்பிரவு1:க யோகேஸ்வரி, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, ம. துளசி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, சி. சிவானந்தன். நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

பாலர் பிரிவு 2.- க. வாசுகி, நுணுவில் மேற்கு கணேச வித்தியாசாலை, தா. சேந்தநாயகி, மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை, ஏ, சிவகுமாரன், சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை.

ஆரம்ப பிரிவு 1.- சி. வசந்தாதேவி, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை, அ. சத்தியபாமா, வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம், ந. சுசீந்திரன், நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலை.

ஆரம்ப பிரிவு 2:-சி. குமாரகுலசிங்கம், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை, அ. சுலோசனா, சேனையூர் அரசினர் தமிழ் மகா வித்தியாலயம், க. தங்கவேல், யா. குரும்பசிட்டி தமிழ்க்கலவன் பாடசாலை,

கீழ்ப்பிரிவு 1:- சி. மனோரஞ்சனி, வின்சன் மகளிர் கல்லூரி, நி. சத்தியபாமா, ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை, க. இரஞ்சிதமலர், கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு 2:- செ. செல்லக்கதிரமலை. சாவகச்சேரி இந்துக்கல்லூரி, ம. மகேந்திரன், மெதடிஸ்த் மத்திய கல்லூரி, க. சரோஜினி, வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம்.

மத்திய பிரிவு- ந. சாந்தாதேவி, வட இந்துமகளிர் கல்லூரி, வ. விமலேஸ்வரி, சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம், க. பத்மாசனி, வட இந்துமகளிர் கல்லூரி.

மேற்பிரிவு 1:- க. சிறீஸ்கந்தராசா, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மா. தயாபரன், கொழும்பு றோயல் கல்லூரி, பொ. சூரியகுமாரன், கொழும்பு றோயல் கல்லூரி

மேற்பிரிவு2:- பா. ஸ்ரீஜெயபாஸ்கரன், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, இ. குமரையா, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், சி. சகுந்தலா, மாத்தளை பி எம் எஸ் மகளிர் மகா வித்தியாலயம்.

## வழக்காளிக்கு அபராதம் எதிரிவிடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமது வீட்டில் டோர்ச் லைட் ஒன்று களவுபோய் விட்டதாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்த ஒரு பெண்ணுக்கு ரூ. 15 அபராதம் விதித்து எதிரியை விடுதலை செய்தார் நீதிபதி. பொய்ச்சாட்சியம் கூறினார் என்னும் குற்றச்சாட்டின் மீது இவ்வபராதம்விதிக்கப்பட்டது.

முதலில் டோர்ச்சைக் களவாடியவரைத் தமக்குத் தெரியுமெனக்கூறிய அப்பெண் பின்னர் தெரியாதெனக்கோட்டில் தெரிவித்தார். முரண்பாடான சாட்சியமளித்ததற்காக நீதிபதி பெண்ணுக்கு அபராதம் விதித்து எதிரியை விடுதலை செய்தார். ஊர்காவற்றுறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராசையா வழக்கை நடத்தினார்.

## ச. ச. நிலைய சமாஜவிழா

வேலணை, ஞாயிறு

உள்ளூராட்சி வாரத்தை கொண்டாடும் பொருட்டு நடைபெறும் தீவுப்பகுதி சனசமூக நிலையங்களின் சமாஜவிழா இம்மாதம் 21-ம் திகதி வேலணை மத்[illegible] மகா வித்தியாலயத்தில் [illegible]டைபெறவுள்ளது. இங்கு நடைபெறும் விழாவில் தீவுப்பகுதி, நெடுந்தீவு காரியாதிகாரிகள் பிரிவிலுள்ள சனசமூக நி[illegible] [illegible]ளது.

# போட்டி பொறாமையை வளர்ப்பதற்கா ச.ச.நிலையம்?

அராலி, ஞாயிறு

"நாடு சுதந்திரமடைந்ததும், கிராமப்புறங்களில் மக்கள் வாழ்க்கை உற்சாகமிழந்து உறக்க நிலையிலிருப்பது கண்டு அதை மாற்றி அமைக்கும் நோக்கமாக சனசமூக நிலையங்கள் அரசாங்கத்தின் சட்டமூலம் ஆரம்பிக்கப்பட்டன. சகலமக்களின் முன்னேற்றத்துக்காகவும் அமைக்கப்பட்ட இந் நிலையங்கள் இன்று சாதிக் கொடு சனசமூக நிலையங்களாக உருவெடுத்து போட்டி பொறாமைகளை வளர்த்து வருவது மிக வேதனைக்குரிய விஷயமாகும். இந்நிலைமாறி சனசமூக நிலையங்கள் கலை, கலாச்சாரம், கல்வி, போன்ற துறைகளில் வாலிபர்களுக்கு பயிற்சியளிக்கவும், கிராமத்தில் தையல், நெசவு, பண்ணைகள் போன்ற தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும், நூல் நிலையம், உடற்பயிற்சி நிலையம், நீச்சல் குளம், விளையாட்டு மைதானம் போன்ற வற்றை அமைக்ர்வும் முன்வரவேண்டும்."

இவ்வாறு அராலி தெற்கு களவுத்துறை சனசமூக நிலையத்தார் நடத்திய பொங்கல் விழாவில் திரு. வி. வி. மூர்த்தி பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் சனசமூக நிலையங்கள் வட்டார கலைவிழாக்கள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கத்துக்காக வெளியிடங்களிலிருந்து கலைஞர்கள்வீரர்களை அழைத்துப் போட்டிகளில் கலந்துகொள்வது தவிர்க்கப்படவேண்டும் எனவும் சொன்னார்.

## விரைவில்கங்கை திருப்பும்திட்டம் செயல்படும்

கோட்டை, ஞாயிறு

மகாவலி கங்கையை வடக்கே திருப்புவதற்கான நிர்மாண வேலைகளை எதிர்வரும் மார்ச் மாத ஆரம்பத்தில் தொடங்குவது என்று அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்ட நிர்மாண வேலைகளுக்கு என்று மனுச்செய்யப்பட்ட சர்வதேசக் கேள்விப் பத்திரங்கள் யாவும் த[illegible]போது அமெரிக்காவிலுள்ள [illegible] இத்திட்டம் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் ஆலோசனை நிறுவனமான சர்வதேச [illegible] ஆலோசகர் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 5 பேர் நீரில்மூழ்கி மாண்டனர்

மட்டக்களப்பு, ஞாயிறு

வாழைச்சேனைக்கு டாவில் பிரயாணிகள் ஏற்றிச்சென்ற இரு படகுகள் கவிழ்ந்ததால் 5 பேர் நீரில் மூழ்கி மரணமாயினர். கொறளைபற்று காரியாதிகாரி படகொன்றில் சென்று 25 பேரைக் காப்பாற்றினார்.

ஒரு படகு கவிழும்போது அப்படகிலுள்ளவர்கள் தாங்கள் மூழ்காமல் தப்புவதற்காக மற்றப்படகொன்றில் அவசரமாகப் பாய்ந்து ஏறியதாலேயே மற்றப்படகும் கவிழ நேரிட்டது எனக் காப்பாற்றப்பட்டபிரயாணிகள் தெரிவித்தனர். காரியாதிகாரியினால் காப்பாற்றப்பட்ட 25 பேரும் ஒரு இரவு முழுவதையும் நீரினுள்ளே கழித்தனர். இதன் பின்னரே கடற்றொழிலாளர்கள் இவர்களைப்பார்த்துவிட்டுச் சென்று மேற்படி காரியாதிகாரிக்கு அறிவித்து அவர்களைக் காப்பாற்றினர்.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
ஒளிவிளக்கு

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜி—பத்மினி
நடித்த
பாலாடை

REGAL JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Richard Johnson,
Daliah Lavi
in
SOME GIRLS DO
(adults)

மனோகரா
யாழ்ப்பாணம்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா போயா3காட்சி
வொலிநாணயக்கார, நடித்த
பிக்பொக்கட்
(சிங்களம்)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 630.930
பிறிப்போயா, போயா2-30 மணி
[illegible]

Tolarams
ஆடவர் தொடக்கம் குழந்தை வரைக்கும்
சகல விதமான
றெடிமேட் உடுப்புளுக்கு
பிரசித்தி பெற்ற இடம்.
அத்துடன் புதிதாக
நவநாகரீக நங்கையருக்கு
ஏற்ற சகல விதமான
அழகு சாதனங்கள்
யாவும் பெற்றுக்கொள்ளலாம்.
ரொலறம்ஸ்
46, மெயின் வீதி யாழ்ப்பாணம்.
போன்: 7099

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப் பெண்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்· நாகேஷ்;
சரோஜாதேவி
மற்றும்பலர் நடித்த
அஞ்சல் பெட்டி 520

6வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட்செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)
நடிகர் திலகம்
★ சிவாஜிகணேசன்
நாட்டியப்பேரொளி
★ பத்மினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலய அதிபராக இருந்து ஸ்கந்தாவுக்கு இடமாற்றம் பெற்றுள்ள இவர் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் பழையமாணவராவர்.

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தோட்டவெளி, ஓலைத்தொடுவாய், மேத்தன் வெளி ஆகிய பகுதிக் கிராம சேவையாளர்களுக்குச் சிங்

களத் தேர்ச்சியின் மைகாரணமாக வேலைநீக்க அறிவித்தல் கடிதம் மன்னார் அரசாங்க அதிபரால் அனுப்பப்பட்டுள்ளது.

நடைபெறும் விழாவில் தீவுப்பிருதி, நெடுந்தீவு காரியாதிகாரிகள் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள் பங்குபற்றுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டம் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் ஆலோசனை நிறுவனமான சர்வதேச பொறியியல் ஆலோசகர் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனத்தின் பரிசிலனையை அடுத்து தெரிவு செய்யப்படும் கேள்விப்பத்திரம் உலக வங்கியின் அங்கீகாரத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

உலகவங்கி கேள்விப்பத்திர அங்கீகாரம் வழங்கியவுடன் வேலைகளை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

(சிங்களம்)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 630. 930
பிறிப்போயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர் - விஜயநிர்மலா
நடித்த
எங்க வீட்டு பெண்

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
ரஞ்சன் - ராஜகுமாரி
நடித்த
சந்திரலேகா
4-30க்கு மட்டும்
KARATE KILLERS

நடிகர் திலகம்
★ சிவாஜிகணேசன்
நாட்டியப்பேரொளி
★ பத்மினி
மற்றும் பலர் நடித்து
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்
தில்லானா
மோகனாம்பாள்





# டிஸ்பிரின்

கொண்டு
தலைவலி, நோவு, சளிசுரம்,
காய்ச்சல், தடிமலிலிருந்து

## நிகரற்ற துரித நிவாரணம் பெறுங்கள்

### அதி துரித நிவாரணம்

டிஸபிரின் கரையக் கூடியதாகையால் இரததோட்டத்தில் விரைவில் செறியும் போதே உடனடியாகச் செயலாற்றத் தொடங்கி மிகத் துரிதமான, மிக உறுதியான நிவாரணத்தை அளிக்கிறது.

### பாவிப்பதற்கு அதி பாதுகாப்பானது

டிஸ்பிரின் பல நாடுகளிற் பாவித்துப் பரீட்சிக்கப்பட்டு, ஒழுங்கான பாவனைக்குப பாதுகாபபானது என்று காணப்பட்டுள்ளது. சாதாரண மாத்திரைகளைப் போலன்றி டிஸபிரின கரையக் கூடியதாகையால், அது உங்கள் வயிற்றில் அசௌகரியததையும் பாதகவிளைவுகளையும் உண்டு பண்ணக் கூடிய அமிலத்துகள்களை விடுவதில்லை.

### டாக்டர்கள் சிபாரிசு செய்வது

உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் டிஸ்பிரின் மேலும் துரிதமான, பாதுகாப்பான, உறுதியான நிவாரணமளிக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள்.




2 மாத்திரைகளை நீரில் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

P.9302

**நிகரற்ற துரித நிவாரணத்திற்கு எப்போதும் டிஸ்பிரின் பாவியுங்கள்.**

ஒரு றெக்கிட் அண்ட கோல்மன் உறபத்தி



# கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

விலைப்பட்டியல்

ரிவர் மார்க் கல்வனைஸ்ட்
இருப்புத் தகடுகள்

நீளங்களில் நெளிவுள்ளது 6', 7', 8', 9', 10' x 21' 2''.

| தொழிற்சாலை மொத்த | விற்பனை விலைகள் ஒரு மெட்ரிக் தொன் | ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு அடி |
|---|---|---|
| 24 BWG | ரூ. 2,125/- | ரூ. 2/90 |
| 26 BWG | ரூ. 2,145/- | ரூ. 2/40 |
| 28 BWG | ரூ. 2,175/- | ரூ. 1/90 |
| 30 BWG | ரூ. 2,205/- | ரூ. 1/65 |
| 32 BWG | ரூ. 2,315/- | ரூ. 1/35 |
| 35 BWG | ரூ. 2,410/- | ரூ. 1/20 |

தட்டை தகடுகள் – 8' X 3'

| தொழிற்சாலை மொத்த | விற்பனை விலைகள் ஒரு மெட்ரிக் தொன் | ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு அடி |
|---|---|---|
| 22 BWG | ரூ. 2,105/- | ரூ. 34/70 |
| 24 BWG | ரூ. 2,125/- | ரூ. 27/40 |
| 26 BWG | ரூ. 2,145/- | ரூ. 23/70 |
| 28 BWG | ரூ. 2,175/- | ரூ. 18/40 |
| 30 BWG | ரூ. 2,205/- | ரூ. 16/20 |

**சிலோன் கல்வனைஸிங் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்**

தொழிற்சாலை கந்தோர்;
லேடி கதான் எஸ்டேட் றோட்,
இரத்மலானை,
இலங்கை.
தொலைபேசி; 7987 மவுண்ட்லவேனியா.

கொழும்பு கந்தோர்;
450, பழைய சோனகத்தெரு,
கொழும்பு-12.
தொலைபேசி; 33143-4

தந்தியும் கேபிளும்:
வின்கொட்-மவுண்ட் லவேனியா, த. பெ. எண் 35, மவுண்ட்-லவேனியா.

# எல்லா நாடுகளுடனும் உறவை வளர்க்க நைஜீரிய அரசு விருப்பம்

## ஜெனரல் கோவான் அறிவிப்பு

லேகோஸ், ஜன. 18

நைஜீரியாவில் தற்பொழுது எழுந்துள்ள நிலைமையை நைஜீரிய அரசு வெற்றிகரமாக சமாளிக்கும் என்று ஜெனரல் யாக்குபு கோவான் கூறியிருக்கிறார்.

நைஜீரியா எல்லா நாடுகளுடனும் உறவுகளை வளர்த்துக்கொள்ள விரும்புகின்றது. நைஜீரிய அரசுக்கு எதிராக விருந்த நாடுகளுடனும் கூட உறவுகளை வளர்த்துக்கொள்ள நாம் விரும்புகிறோம் என்று ஜெனரல் கோவான் குறிப்பிட்டார்.

**ஆபிரிக்க நாடுகளுக்கு வெற்றி**

நைஜீரியாவில் உள்நாட்டுக் கலவரங்கள் முடிவுற்றிருப்பது ஆபிரிக்க நாடுகள் அனைத்துக்குமே கிடைத்துள்ள ஒரு வெற்றியாகும் என்று லேகோஸ் வந்துள்ள ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை ஸ்தாபனத்தின் பொதுக் காரிய தரிசி குறிப்பிட்டிருக்கிறார். நைஜீரிய தலைவர்களுடன் உயர்நிலை பேச்சுக்கள் நடத்துவதற்காக அவர் லேகோஸ் வந்திருக்கிறார்.

பியாப்ராவை அங்கீகரித்த நாடுகள் உட்பட எல்லா ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலும் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டிய காலம் வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த நாடுகளுக்கிடையில் இருந்துவரும் கருத்து வேறுபாடுகள் களையப்பட வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார்.

**யுதான்ட் வருகை**

நைஜீரிய தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக ஐ.நா. பொதுச் செயலாளர் இன்று லேகோஸ் வரவிருக்கின்றார். பியாப்ரா மக்களுக்கு நிவாரணவசதிகள் செய்வது பற்றி நைஜீரிய தலைவர்களுடன் அவர் ஆலோசனைகள் நடத்துவார்.

பியாப்ரா தலைவர் கேணல் ஒஜுக்கு பிரான்சில் அடைக்கலம் புகுந்திருப்பதாக வெளிவந்த செய்திகளை பிரான்ஸ் மறுத்திருக்கின்றது. பிரான்ஸ் பியாப்ராவுக்கு உதவிகள் செய்ததாக லேகோஸ் ஏற்கனவே கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

பியாப்ராவில் சண்டை ஓய்ந்துவிட்டதைத் தொடர்ந்து கொரில்லா நடவடிக்கைகள் நடைபெறமாட்டாது என்று லேகோஸ் சரணாகதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள பியாப்ரா தூது கோஷ்டியின் தலைவர் அறிவித்திருக்கிறார்.

## '30 ஆயிரம் பேரின் நலனைக் கவனிக்கும்'

உடுப்பிட்டி, ஞாயிறு

ஆட்சிமன்ற உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம்பியுமான திரு மு சிவசிதம்பரம் இன்று வதிரியில் திறந்து வைக்கப்படவிருக்கும் உடுப்பிட்டித் தொகுதிக் காரியாதிகாரி கந்தோர் திறப்புவிழாவை யொட்டி பொதுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள சுமார் 30,000 பேரின் நலன்களைக் கவனிக்க வேண்டிய பெரும் பொறுப்பு உடுப்பிட்டிக் காரியாதிகாரி பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதலால் பொதுமக்கள் இக் காரியாதிகாரி கந்தோர் வெற்றிகரமாக இயங்கப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இதன் மூலமே உண்மையான ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியும். பலவித எதிர்ப்புக்களுக்கும் கஷ்டங்களுக்கும் இடையில் கிடைத்துள்ள இக்காரியாதிகாரி கந்தோர் உடுப்பிட்டித் தொகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

— —

## ஆசிரியர் பெருமிதம்

அராலி, ஞாயிறு

''பொதுக் கல்வித் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள எனது மாணவன் ஒருவரைச் சந்தித்தபோது இப்போது அவர் என்ன தொழில் செய்கிறார் என வினவியதற்கு அம் மாணவன் தான் விவசாயம் செய்வதா மகிழ்ச்சியுடன் தெ[illegible]த்தார். படித்து விட்[illegible] நாற்காலி உத்தியோகம் தேடி அலைந்து காலத்தை வீணாக்கும் இந்நாளில் உழவுத்தொழிலை மேற்கொண்டு உயர்ந்த வாழ்வு வாழும் சுவரைக் குறி[illegible]ப் பெருமைப்படா

## தமிழகத்தில் எல்லாம் தமிழ் மயம்

### தமிழரசுப் பிரமுகர் தகவல்

உடுப்பிட்டி, ஞாயிறு

''இம்மாதம் முதலாந் திகதியிலிருந்து தமிழகத்தில் தமிழ் அரசகரும மொழியாக்கப்பட்டுவிட்டது. தமிழகம் தனித் தமிழ்நாடாக இயங்கிவருகின்றது. திணைக்களங்களின் பெயர்கள், பெயர்ப் பலகைகள், ஊர்ப் பெயர்கள், வியாபாரத்தலங்களின் பெயர் எல்லாம் தமிழ் மயமாகவே காணப்படுகின்றன. அங்கே தமிழுக்கு அடுத்தபடியாக ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந்தி என்ற தேசிய மொழி இருக்கிறதென்ற உணர்ச்சி முற்றாக இல்லை''

இவ்வாறு சமீபத்தில் தமிழகம் சென்று சுற்றுப்பிரயாணஞ்செய்து திரும்பிய இலங்கைத் தமிழரசுக்கட்சிப் பிரமுகரும், உடுப்பிட்டிக் கிளைத் தலைவருமான முன்னாள் நீதிபதி திரு. கே. ஜெயக்கொடி தெரிவித்தார்.

தமிழகத்தில் பழுத்த முதுபெரும் அரசியல் தலைவர்களையும், துடிப்பு மிக்க இளம் தலைவர்களையும் சந்தித்ததாகவும், அவர்கள் எல்லாரும் இலங்கை வாழ் தமிழ்மக்களின் விடயங்களில் மிகவும் அக்கறை காட்டி வருகின்றனர் என்றும், தமிழரசுக்கட்சி மீது அவர்கள் நல்ல அபிப்பிராயம் வைத்துள்ளனரென்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. ஜெயக்கொடி மேலும் கூறியதாவது:

''தமிழ்நாட்டில் போக்குவரத்து வசதிகள் மிகவும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன. தனிப்பட்டவர்களும், அரசாங்கமும் பஸ்போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் அரசாங்கம் செய்ததுபோல் பஸ்போக்குவரத்தைத் தமிழக அரசாங்கம் முற்றாகக் கையேற்கவில்லை. ஆனால் அங்கு அரசாங்கத்தினால் சேவைக்கு விடப்படும் பஸ்கள் மிகவும் சௌகரியமாகவும், வசதியாகவும் பிரயாணஞ்செய்யத்தக்கதாகவும் உள்ளன.

இங்கு பஸ்களில் பெண்களுக்கு நாம் ஆசனம் கொடுப்பதில்லை. ஆனால் தமிழகத்தில் பஸ்களில் பெண்களுக்குத் தனி மதிப்பும் கௌரவமும் கொடுக்கப்படுகின்றன. ஒரு பெண் இருக்கும் ஆசனத்தில் எந்த ஆடவனும் இருப்பதில்லை.

தமிழகமெங்கும் நூற்றுக் கணக்கில் அண்ணா சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழக மக்கள் அறிஞர் அண்ணா மீது வைத்துள்ள அன்புக்கு இவை அடையாளங்களாகும்.''

— —

## தொலைபேசி பெற முயற்சி

முசலி, ஞாயிறு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கொக்குப்படையான என்ற உபதபால்கந்தோருக்கு தொலைபேசி வசதியளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருமலையில் தனியார் துறையில்

## வள்ளம் கட்டும் தொழிற்சாலை உருவாகும்

திருகோணமலை, ஞாயிறு

திருமலை துறைமுக அபிவிருத்தியில் தனியார் துறையினருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவிருக்கின்றது. விரைவில் திருமலையில் மீன்பிடி வள்ளத் தொழிற்சாலையொன்று தனியார் துறையில் நிறுவப்படவிருக்கின்றது. இத் தொழிற்சாலை நிறுவப்படுமானால் திருமலைத் துறைமுகம் அபிவிருத்தி அடைவதோடு படித்த வாலிபர்களதுவேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்க இம் மீன்பிடி வள்ளத் தொழிற்சாலை ஓரளவு உதவிபுரியும்.'

பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் திருமலை அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொம்பனியின் பிரதிநிதியாரி கொழும்பில் இயங்கும் மராயன் சீகிறிட் இங்கிலாந்து சீகிறிட் லிமிட்டட்கொம்பனி அண்மையில் திருமலைப் பகுதிக்கு வந்து இத் தொழிற்சாலை நிறுவ ஏற்ற இடத்தையும் வசதிகளையும் பார்வையிட்டதாகவும் சீனன் வாடிக்கருகில் இருக்கும் சீனப்கோவ் என்ற இடத்தில் 3 ஏக்கர் காணியில் இத் தொழிற்சாலை நிறுவப்படும் என்றும் ஆகாயப் படையின் எல்லைக்குள் இருக்கும் இம் மூன்று ஏக்கர் காணியை இந்த ஸ்தாபனத்துக்கு கொடுக்க ஆகாயப் படையினர் உடன்பட்டு விட்டனரென்றும் அவர் தெரிவித்தார்.

30 வருடக் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இந் நிலத்தில் நிறுவப்படும் மீன்பிடி வள்ளத் தொழிற்சாலையினால் பலகோடி ரூபா வருமானமடைவதோடு இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்கு இது ஒரு முன்னோடியாகவும் திருமலை மாவட்டத்தில் பெரும்துறைமுக அபிவிருத்தியையும் காண முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

— —

## பரிசு பெறுகின்றனர்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பஜனைச் சபையினரால் நடத்தப்பட்ட இரண்டாது சமய அறிவுப் போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர் விபரம்வருமாறு: ஹட்டனைச் சேர்ந்த ச. விநாயகரத்தினம் தங்கப்பதக்கமும் பொகவந்தலாவையைச் சேர்ந்த செல்வி செ புஷ்பராணி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செ. சோமசுந்தரம் ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களும் பெற்றனர். பின்வரும்மூன்றுபோட்டிகளுக்கு அதிர்ஷ்டச்சீட்டு மூலம் பரிசுகள் தெரியப்பட்டன.

மார்கழிமாதம் முழுவதும் பஜனையில் கலந்துகொண்டவர்களில் செல்வன் எஸ். சந்திரசேகரன், தங்கப்பதக்கமும், செல்வன் கே. வைத்தீஸ்வரன். செல்வி ஆர். வசந்தி ஆகியோர் வெள்ளிப் பதக்கங்கங்களும் பெற்றனர்.

வெள்ளிக்கிழமை தோறும் பஜனையில் கலந்துகொண்டவர்களில் செல்வி சு. ஐயம்மா தங்கப்பதக்கமும் செல்வன் என். இளங்கோ, செல்வி எம். நாகேஸ்வரி ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களும் பெற்றனர்.

வேஷப்போட்டியில் செல்வி ஏ. இந்திராணிக்கு வெள்ளிப்பதக்கமும் செல்வி ஏ. ரதிக்கு குத்துவிளக்கும் பரிசுகிடைத்தன. இதர பிள்ளைகளுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன.

— —

## நீர் விநியோகம்

வார்ஸோவில்

## சீன-அமெரிக்க பேச்சுக்கள் செவ்வாயன்று ஆரம்பம்

### உறவுகள் பலப்படும் என யு. எஸ். அமைச்சர் நம்பிக்கை

நியுயோர்க், ஜன. 18

செவ்வாய்க்கிழமை வார்சோவில் ஆரம்பமாகவிருக்கும் சீன-அமெரிக்கப் பேச்சுவார்த்தைகளின் நோக்கம் இரு நாடுகளுக்கிடையிலும் உறவுகளை வளர்த்துக்கொள்வதே என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸ் கூறியிருகிக்ருர்.

பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்துள்ள பேட்டியில் இதை தெரிவித்திருக்கிறார்.

இரு நாடுகளுக்கிடையிலுமான பதட்டம் நீங்கி[illegible] எல்லைத்தகராறுகளினால் எழுந்துள்ள நிலைமையைப் பயன்படுத்திக்கொள்வதல்லவென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

**ஆசியா நாடுகளுக்கு நன்மை பயக்குமா?**

சீன-அமெரிக்க பேச்சுக்கள் ஆசிய நாடுகளுக்கு நன்மை பயக்கக்கூடும் என்று இந்த நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகளும் அரசியல்வாதிகளும் எதிர்பார்ப்பதாக ஹங்காங் செய்தியொன்று கூறுகின்றது.

இரண்டு ஆண்டுகளின் [illegible] யூனிஸ்ட் சீனா தான் என்று இந்தப் பேச்சுக்களின்போது பீகிங் பிரதிநிதி வற்புறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தாய்வேயா பீகிங்கா சீனமக்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றது என்று கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்காவுக்கு இருந்துவரும் பிரச்[illegible] மீண்டும் தலைதூக்கும் என்று கருதப்படுகின்றது.

கடந்த காலத்தில் இரு தலைநகர்களிலும் இருந்துவரும் வெளிநாட்டு தூதுவர்களைக் கணக்கெடுக்கையில் தாய்வேயிலேயே அதிக

## பெரிய அரசியல் கட்சிகளின் அடுத்த தேர்தல் 'குண்டு'?

கோட்டை, சனி

தமிழ் பல்கலைக்கழக விஷயம் தமிழ்ப் பகுதிக[illegible] உள்ள பிரதான கட்சிகளுக்கு மட்டுமின்றி சிங்களப் பகுதிகளில் உள்ள பிரதான கட்சிகள் மத்தியிலும் அடுத்த பொதுத் தேர்தலின்போது [illegible]தப்படுகின்றது. இப்படியான பிரசாரத்தின்மூலம் மலைநாட்டில் வாழும் வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மக்களின் வாக்குகளை எளிதாகப் பெற்று அப்பகுதிகளில் ஐக்கியதேசியக்கட்சியின் வேட்பாளர்களைத் தோற்கடிக்க முடியும் என்று பற்றி எதிர்க்கட்சியினர் முடிவு செய்ததால் தாமும் அதையே செய்யப்போவதாக அறிவிப்பதென்றும் ஐக்கியதேசியக் கட்சியினரில் சிலர் ஆலோசனை செய்வதாகக் கூறப்படுகின்றது.

எந்த நிலைமையிலும் அடுத்த தேர்தலின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்துள்ள பேட்டியில் இதை தெரிவித்திருக்கிருர்.

இரு நாடுகளுக்கிடையிலுமான பதட்டம் நீங்கியிருப்பதாகவும் மேலும் நல்ல உறவுக்கு இந்தப் பேச்சுகள் வழி வகுக்கும் என்று தாம் நம்புவதாக திரு. வில்லியம் ரோஜர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவும் சீனுவும் பத்திரிகையாளர்களேயும் கல்விமான்களேயும், பெரிய தலைவர்களேயும் பரஸ்பரம் வந்துபோக அனுமதிக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

இந்தப் பேச்சுக்களின் நோக்கம் சீன-சோவியத் என்று இந்த நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகளும் அரசியல்வாதிகளும் எதிர்பார்ப்பதாக ஹங்காங் செய்தியொன்று கூறுகின்றது.

இரண்டு ஆண்டுகளின் பின்னர் ஆரம்பமாகும் இந்தப் பேச்சுக்கள் ஆசியாவிலும், தென்கிழக்காசியாவிலும் உள்ள கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளுக்கு பெருமளவில் முக்கியத்துவமுள்ளவையாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிருர்கள்.

அமெரிக்க வால்ட்டர் ஸ்டோஸல், சீன தூதர் வியாங் ஆகிய இருவரும் செவ்வாய்க்கிழமையன்று வார்சோவில் சந்தித்துப் பேச விருக்கிருர்கள். சீன மக்களின் ஒரே பிரதிநிதி கம் தலைதூக்கும் என்று கருதப்படுகின்றது.

கடந்த காலத்தில் இரு தலைநகர்களிலும் இருந்து வரும் வெளிநாட்டு தூதுவர்களைக் கணக்கெடுக்கையில் தாய்வேயிலேயே அதிகமானவர்கள் இருப்பதாகத் தெரிகின்றது. தாய்லான் தலைநகரில் 66 வெளிநாடுகள் ராஜீய பிரதிநிதிகளை வைத்திருக்கின்றன. ஆனால் 46 நாடுகள் மாத்திரமே பீகிங் அரசை அங்கீகரித்துள்ளன. ——

## ஆங்கில ஆசிரியர்கள் நியமனம்

முசலி, ஞாயிறு

கல்வி இலாகாவின் திடீர் நடவடிக்கையின் பேரில் மன்னர் மாவட்டத்திலுள்ள ஏறக்குறைய முப்பத்திஞன்கு பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள்

இவர்கள் கஷ்டமான பிரதேசங்களில் சேவை செய்வதற்கென்று கல்வி இலாகாவால் தெரிந்தெடுக்கப்பட்டவராவர்.

...கம் தேடி அலைந்து காலத்தை வீணுக்கும் இந்நாளில் உழவுத்தொழிலை மேற்கொண்டு உயர்ந்த வாழ்வு வாழும் சுவரைக் கு[...]ப் பெருமைப்படாதிருக்கமுடியாது.''

இவ்வாறு அராலி தெற்கு களவத்துறை சனசமூக நிலையத்தின் 23-ம் ஆண்டு நிறைவில் பேசுகையில் ஆசிரியர் திரு. இ. மகாதேவா (தேவன் - யாழ்ப்பாணம்) கூறினுர்.

விழாவுக்கு நிலையத்தலைவர் திரு. இ. கந்தமுத்து தலைமை வகித்தார்.

புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவில் தலைவராக திரு. இ. கந்தமுத்துவும், காரியதரிசியாக திரு. க. இரத்தினசிங்கமும் பொருளாளராக திரு. க. சின்னத்துரையும் தெரிவுசெய்யப்பட்டனர். அராலி கி. ச தலைவர் திரு. இ. நாகலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மெல்லிசை நிகழ்ச்சியும் புராண நாடகமும் விழாவில் இடம்பெற்றன.

உள்ள பிரதான கட்சிகளுக்கு மட்டுமின்றி சிங்களப் பகுதிகளில் உள்ள பிரதான கட்சிகள் மத்தியிலும் அடுத்த பொதுத் தேர்தலின்போது [...] தேர்தல் ''குண்டாக'' விளங்கப்போகிறது என்று அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது.

தமிழ் பல்கலைக்கழகமா' இந்துப் பல்கலைகழகமா என்பதில் மட்டுமின்றி யாழ்ப்பாணத்திலா கிழக்கு மாகாணத்திலா என்ற அளவுக்கு தமிழ் பகுதிகளில் பல்கலைக்கழக விஷயம் பிரச்னையைக் கிளப்பியிருப்பதால் இந்த நிலைமையைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுவருகின்றன.

பல்கலைக்கழகம் இந்த ஆட்சியின்போது கிடைக்கும் என்ற நம்பிக்கை தளர்ந்து வருவதால் அடுத்துத் தாம் பதவிக்கு வந்தால் கிழக்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்திலும் இரு பல்கலைக்கழககங்களை உருவாக்கித் தருவதாக எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்யக்கூடும் என்று கருவடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மக்களின் வாக்குகளை எளிதாகப் பெற்று அப்பகுதிகளில் ஐக்கியதேசியக்கட்சியின் வேட்பாளர்களைத் தோற்கடிக்க முடியும் என்று அவர்கள் கருதுகிருர்களாம்.

ஐக்கிய தேசியக்கட்சியினரை தமிழர் நம்பியதால் பயன் ஏதும் ஏற்படவில்லையென்பதாக அவர்கள் பிரசாரத்தைத் தமிழ்ப் பகுதிகளில் நடத்த திட்டமிட்டுள்ளனராம். ஆனுல் இப்படியான ஒரு நிலைமை உருவாக அடுத்த தேர்தலின் போது சங்கடத்தில் மாட்டிக்கொள்ளாமல் இருப்பது பற்றி ஐக்கியதேசியக்கட்சியின் மேலிடம் தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இப்போதைய நிலையில் தமிழ்ப் பல்கலைக்கழக விஷயத்தில் இரு பெரும் தமிழ்க் கட்சிகளையும் இணங்க வைத்து ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கிக் கொடுப்பதென்றும் கிழக்கு மாகாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதாக அறிவிப்பதென்றும் ஐக்கியதேசியக் கட்சியினரில் சிலர் ஆலோசனை செய்வதாகக் கூறப்படுகின்றது.

எந்த நிலைமையிலும் அடுத்த தேர்தலின்போது வகுப்புவாத பிரசாரங்களை பெரிய அரசியல் கட்சிகள் கைவிட்டுவிடக்கூடும் என்றும் சிறுபான்மை மக்களான தமிழர் முஸ்லிம்களை அணைத்துக்கொள்வது பற்றியே இவைகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் அமையக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. என்ருலும் உதிரி சிங்களக் கட்சிகள் மலைநாட்டில் வகுப்புவாதபிரசாரத்தை கைவிடக்கூடிய அறிகுறிகள் எதுவும் இல்லை.

மேலும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் ஆதரவை சம்பாதிக்கும் நேரத்தில் பெரிய கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் மலைநாட்டுத்தமிழர்களைக் கைவிட்டு விடக்கூடுமோ என்றும் சில் வட்டாரங்கள் அச்சம் தெரிவிக்கின்றன.

ஏ. ரதிக்கு [...] பரிசுகிடைத்தன. இதர பிள்ளைகளுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன.

## நீர் விநியோகம் விஸ்தரிப்பு

பருத்தித்துறை, ஞாயிறு

அத்துளு தண்ணீர்த் திட்டம் கரவெட்டி ஸ்ரீ நாரத பௌத்த சிங்கள பாடசாலை வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதன் பயனுக கன்பொல்லை வீதிப் பகுதியிலுள்ள சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கும் நீர் விநியோக சேவை கிடைக்குமெனத் தெரிகிறது. ......

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், திங்கள்

சுன்னுகம் பட்டினசபையின் ஆதரவில் நடைபெறும் கருத்தரங்கில் இம்மாதம் 22-ம் திகதி வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளரும் மல்லாகம் கிராம சபை முதல்வருமான திரு வ. பொன்னம்பலம் எம். ஏ. இந்திராவும் இந்தியாவும் என்ற தலைப்பில் பேசுவார்.

# தமிழகச் செய்திகள்

### சொத்து சண்டை

சென்னை, ஜன 18

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு சொந்தமான சொத்துக்களை சின்டிகேட் தலைவர்களிடமிருந்துமீட்பதற்கு திரு சி சுப்பிரமணியம் கோர்ட்டில் வழக்குத் தொடரவிருக்கிருர். காங்கிரஸ் சொத்துக்களை கோர்ட்டில் சமர்ப்பிக்கும்படி திரு சுப்பிரமணியமும் அவரைச் சார்ந்தவர்களும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர், சின்டிகேட் தலைவர் திரு கக்கனுக்கு புறக்டர் நோட்டீஸ்அனுப்பியிருந்தார்கள். இந்த நோட்டீஸ் புறக்கணிக்கப்பட்டதால் இப்போது திரு சுப்பிரமணியமும் ஆதரவாளர்களும் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யவிருக்கிருர்கள்.

0 0 0

### ஜானகிக்கு பரிசு

'இரு கோடுகள்' சினிமா படத்தின் 100-வது நாள் விழாவில் நடிகை சௌகார் ஜானகிக்கு வெள்ளிக் கேடயம் பரிசு கொடுக்கப்பட்டது. இந்த விழாவுக்கு முதலமைச்சர் திரு. கருணுநிதி தலைமை வகித்தார். ஜெமினிகணேசன், டைரக்டர் கே பாலச்சந்தர் ஆகியவர்களுக்கும் வெள்ளிக்கேடயங்கள் பரிசு கொடுக்கப்பட்டன. விழாவில் முதலமைச்சர் பேசுகையில் படத்துறையில் போட்டிமனப்பான்மையிருக்கலாம், ஆனுல் பொருமை இருக்கக்கூடாது என்ருர். இந்தப் படத்தில் நடித்த நாகேஷ், சகஸ்ரநாமம் போன்றவர்களுக்கும் வெள்ளிக்கேடயங்கள் பரிசு கொடுக்கப்பட்டன.

### வள்ளுவர் பெயரைச் சூட்டுக

மதுரை பல்கலைக்கழகத்துக்கு திருவள்ளுவர் பெயரைச் சூட்ட வேண்டும் என்று தமிழரசுக்கழகத் தலைவர் திரு ம பொ சிவஞானம் யோசனை கூறியிருக்கிருர். திருவள்ளுவர்விழா வொன்றில் பேசிய ம பொ சி அவர்கள் தமிழ் கலாசாரத்தின் பிறப்பிடம்மதுரை. சங்கம் வைத்து தமிழ் வளர்த்தது மதுரையில் தான், திருக்குறளை சோதனைக்குட்படுத்தி ஏற்றுக் கொண்டதும் மதுரையில் தான் எனவே மதுரையில் உள்ள பல்கலைக்கழகத்துக்கு திருவள்ளுவர் பல்கலைக்கழகம் என்று பெயர்சூட்ட வேண்டும் என்று ம பொ சி கூறினுர்.

அரசாங்க சேவைக்குத் தேர்ந்தெடுக்க நடத்தப்படும் தேர்வுகளிலும் திருக்குறளின் ஒருபகுதி பாடமாக வைக்கப்பட வேண்டும் என்றும் அதில் தேறியவர்களுக்கே பதவி கொடுக்க வேண்டும் என்றும் அரசாங்கம் வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கும்போது திருக்குறளை அதிகமாக உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்றும் நீதிமன்றங்களில் நீதிபதிகள் திருக்குறளைமேற்கோள்களாக எடுத்துக்காட்டலாம் என்றும் ம பொ சி கூறினுர்.

0 0 0

### தமிழில் விஞ்ஞானம்

விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கான 30 தமிழ் நூல்களை தமிழ்நாட்டு கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் வெளியிட்டார்.


நெற் இருமிப் பீடைகள் யாவற்றையும் அறவே ஒழிக்க உபயோகியுங்கள்


'என்றெக்ஸ்' 20

என்றின் என்னும் பொருளின் வலுமிக்க உருவம்




நெற் பயிரைத்தாக்கும் கிருமிப் பீடைகள் பல உள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகை கிருமி நாசினி உயர்ந்த விலைகளில் கிடைக்கின்றது. இவையனைத்தும் இவ்வுயர் விலைகளில் தனித் தனியாகச் செய்ய வல்லதை ஒரே முறையில் சிக்கனமாகச் செய்ய வல்லதே ''என்றெக்ஸ் 20'' ''என்றெக்ஸ் 20'' இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல்வேறு பாகங்களிலும் வெற்றிகரமாகப் பாவிக்கப் படுகிறது. தற்பொழுது, நெற்கிருமிப் பீடைகளுக்கு மட்டுமின்றி, புகையிலை, பருத்தி, காய்கறி வகைகளைத் தாக்கும் இருமிப் பீடைகளையும் உடன் அழிக்கக் கைதேர்ந்ததென நிருபிக்கப்பட்டு, உங்களுக்குச் சிபார்சு செய்யப்படுகிறது. நெற்பயிர் 10-14 நாளைய பருவத்திலிருக்கையில் முதன் முறையாகத் தெளிப்பின் பயிர்கள் முழுப்பாதுகாப்பு பெறும். பின்னர் மாதத்திற்கொருமுறை பாவிப்பின் பீடையற்ற செழிப்பான பயிர் பெறுவீர்கள். நெற்பயிர், புகையிலை, பருத்தி, காய்கறிவகையின் இருமிப் பீடையழிப்பிற்கு 1 திரவ அவுன்ஸ் ''என்றெக்ஸ் 20'' உடன் 2 கலன் நீர் கலந்து 32-40 கலன் கொண்ட இத்திரவத்தை ஒவ்வொரு ஏக்கருக்கும் பாவிக்க.

[...] பெறவும் பீடையற்ற நற்தாவரங்களுக்கும் [...] ஏக்கருக்கு ரூ. 9/- சிக்கனமான 'என்றெக்ஸ் 20' மட்டுமே.




ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL

**மணிவாக்கு**

உபயோகமான மனித குலத்தின் வாழ்க்கைக்குப் பயன்படும் - ஏதேனும் உண்டாக்கப் பயன்படும் உழைப்பே உண்மையான உழைப்பு.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna
Post Box: 49. Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் 6-ந் திகதி (19-1-70)

# கைத்தொழில் அமைச்சரின் விஜயம்

கைத்தொழில், கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இன்று வடபகுதிக்கு வருகை தருகிறார். அவர் இங்கு வருவது இதுதான் முதல் தடவையல்ல. ஆனாலும் இதற்கு முன்னர் அவர் இங்குவந்து சென்றதற்கும் இப்போது அவர் இங்கு வருவதற்கும் வித்தியாசம் உண்டு. யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய்த் தொகுதியில் அச்சுவேலியில் கைத்தொழில்பேட்டை ஒன்றை நிறுவுவதற்கான வேலைகளை ஆரம்பித்துவைப்பதற்காக அமைச்சர் பிலிப் குணவர்த்தன இன்று வருகிறார். மூன்று நாட்கள் இங்கு தங்கி பல இடங்களுக்கும் சென்று பார்வையிடவிருக்கிறார். அவரது விஜயம் வடபகுதியின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவுமென்றே நம்பலாம்.

திரு பிலிப்குணவர்த்தனவைப் பற்றி வடபகுதி மக்கள் நன்கு தெரிந்திருக்கிறார்கள். அவர் சொல் வீரர் மட்டுமல்ல செயல் வீரருமாவார். வடபகுதியில் ஒரு கைத்தொழில்பேட்டை நிறுவப்படவேண்டுமென்ற நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றிவைப்பதற்காக இன்று வரும் கைத்தொழில் அமைச்சர் வடபகுதியில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களைக் கொண்டு புதிய புதிய கைத்தொழில்களைத் தொடங்குவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். இதற்கு இங்குள்ள தொழிலதிபர்களும் கைத்தொழில் ஆராய்ச்சியாளர்களும் அமைச்சருக்கு நல்லமுறையில் விபரமாக இங்குள்ள நிலைமையை எடுத்துக்கூற வேண்டியது அவசியம்.

கொழும்பு நகருக்கருகில் 'எக்கலை' என்ற இடத்தில் கைத்தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்டபோதே வடக்கிலும் ஒரு கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. எக்கலை கைத்தொழில்பேட்டை பலவிதத்திலும் வளர்ச்சியடைந்துள்

நாட்டின் முன்னேற்றமே தங்கியிருக்கிறது வடபகுதியைச் சேர்ந்த தொழில் அதிபர்களும் செல்வந்தர்களும் வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் வாழ்கிறார்கள். அவர்கள் இங்கு தாராளமாக முதலீடுசெய்து புதிய புதிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு அவர்களுக்கு போதிய ஊக்கமும் உற்சாகமும் அளிக்கப்படவேண்டும். அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் ஆரம்பத்தில் சிறுசிறு கைத்தொழில்கள்தான் இடம் பெறுமாம். இதுநிரந்தரமாகிவிடக்கூடாது. அயல் நாடான இந்தியாவில் இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நமக்குத் தேவையானவை அங்கு உருவாக்கப்படுகின்றன. பண்டமாற்று ஒப்பந்தத்தின் மூலம் அவற்றை இறக்குமதிசெய்து இங்கு கைத்தொழில்களை விருத்திசெய்ய முடியும்.

தமிழ்நாட்டில் பனையில் இருந்து பல பொருள்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன, வடக்கில் பனைபொருள் ஆராய்ச்சிநிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்று ஆட்சிமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் அது இன்னும் செயல்படவில்லை. இப்போதைக்கு பனம் பொருள் ஆராய்ச்சிநிலையம் நிறுவப்படமுடியாவிட்டாலும் தமிழ்நாட்டின் உதவிபோடும் ஒத்துழைப்போடும் இங்கு பனையிலிருந்து பல பொருள்களை உற்பத்தி செய்து நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்வதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதிசெய்து அந்நிய செலாவணியைச் சேமிக்க முடியும்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை மூலம் இங்கு புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுவது மட்டுமல்லாமல் வர்த்தகம், போக்குவரத்துத் தொடர்பின் மூலமும் வடக்கிலுள்ள பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழிபிறக்கும் என்பதையிட்டு வடபகுதி மக்கள்

செனட்சபையிலே . . .

நமது நிருபர் பெரி சுந்தரலிங்கம்

# செனட்சபையால் என்ன பயன்?

மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சிமன்றத்தில் வீற்றிருப்பதால் நமது அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ், ஆட்சிமன்றம்தான் அதிகமான அதிகாரத்தையுடைய சபையாக இருக்கின்றது. இதன் விளைவாக மிகப் பெரும்பாலான சட்டமசோதாக்களெல்லாம் முதன்முதலில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆதியோடு அந்தமாக அலசி ஆராயப்பட்ட பின்னர் நிறைவேற்றப்பட்டு செனட்சபையின் பரிசீலனைக்கு சம்பிரதாய பூர்வமாக அனுப்பப்படுகிறது.

இப்படி செனட்சபைக்கு வரும் மசோதாக்களில் நாட்டின் நிதி சம்பந்தமான மசோதாக்களில் செனட்சபைக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. ஏனைய மசோதாக்களையும் முற்றாகத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் செனட்சபைக்கு இல்லைத்தான்.

என்றாலும் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் தேர்தலைக் கண் வைத்து, உணர்ச்சிபூர்வமான அடிப்படையிலேயே எந்தப் பிரச்னையையும் நோக்குவார்கள் என்று கருதியே அமைதியான தேர்தல் பரபரப்பற்ற சூழ்நிலையில் அறிவுபூர்வமாக, ஆக்கபூர்வமாக எந்த விஷயத்தையும் சீர்தூக்கிப் பார்த்து சாய்தல், உலத்தலின்றி, ஒவ்வொரு துறையிலும் முக்கியமானவர்கள் முன்னேறியவர்களின் கருத்துக்களையும் பெற வேண்டியது அவசியம் என்ற அடிப்படையில்தான் செனட்சசை உருவாக்கப்பட்டது.

## 22 கால வரலாறு கண்டது என்ன?

செனட்சபையில் கடந்த 22 கால ஆண்டு வரலாற்றில் எவ்வளவு தூரத்துக்கு இந்த அடிப்படையில்செயல்பட்டிருக்கிறது என்பது வாதப் பிரதிவாதத்திற்குரிய கேள்விதான்.

இன்று செனட்சபையில் தலைவர் செனட்டர் ரத்னயகா, சபை முதல்வர், நீதி அமைச்சர்செனட்டர் விஜயமானே ஆகியோருக்கும் இடையில் நடைபெற்ற ஆக்கபூர்வமான வாக்குவாதததை எழுதுவதற்கு முன் இப்படியொரு 'முன்னுரை' அவசியமாகத்தான் படுகிறது.

காட்டுப்பறவைகள், காட்டு விலங்குகளின் பாதுகாப்புக்கென உள்ளஒரு சட்டத்தை சில இடங்களில் திருத்த வழிவகுக்கும் ஒரு மசோதாவை நிதியமைச்சர் செனட்டர் விஜயமானே சமர்ப்பித்திருந்தார்.

இந்தத் திருத்த மசோதாவை எதிர்க்கட்சியினரும் ஏகமனதாக ஆதரித்தபோதிலும் வனவிலங்குகள், பறவைகள் பரிபாலனத்திற்கான சில ஆக்கபூர்வமான யோசனைகளை எதிர்க்கட்சிச் செனட்டர் ரெஜி பெரேராவும் ஆளும்கட்சிச் செனட்டர் டாக்டர் கல்பகேயும் தங்கள் பேச்சில் வெளியிட்டனர்.

இந்தக் கருத்துக்களையொட்டி திருத்த மசோதாவை செனட்சபையின் பொறுக்குக் கமிட்டிக்கு விடலாமே என்று அவைத் தலைவர் செனட்டர் ரத்னயகா யோசனை வெளியிட்டபோது நீதிஅமைச்சர் அதனை ஏற்க மறுத்து சபையில் வெளியிடப்பட்ட கருத்துக்களையெல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு எடுத்துக் கூறுவதாகவும் இந்தத் திருத்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்குவிட வேண்டிய அவசியமில்லையெனவும் வலியுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து செனட்சபைத் தலைவர் செனட்டர் ரத்னயகாவும் நீதியமைச்சரும் தத்தம் நிலையை வலியுறுத்தி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

## ஆதாரங்களுடன் அவைத் தலைவர்

ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மசோதாவேயானாலும் செனட்டர்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களுக்கும் மதிப்பளித்து, அவற்றின்அடிப்படையிலும் சட்டத் திருத்தங்கள் நடைபெற வேண்டும்; வெறுமனே பேசிவிட்டுப் போவதால் பயன் ஏதுமில்லை; அமைச்சர்களிடம் சொல்வதாகச் சொன்னாலும், அப்புறம் அந்த வாக்குறுதிகளெல்லாம் மறக்கப்பட்டு விடுகின்றன என்ற கருத்துப்பட செனட்டர் ரத்னயகா தனது நிலையை மிக வன்மையாக, அமைதியாக, ஆணித்தரமாக வலியுறுத்தி ஆதாரமாக சபை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் சட்டவிதிகளிலிருந்தும் ஆதாரங்களை வாசித்துக் காட்டினார்.

ஆனாலும் நிதியமைச்சர் விட்டுக் கொடுக்காததால், மசோதா வாக்குக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதே பிரச்னை மீண்டும் தேநீர் இடைவேளைக்குப் பின்னர் தலைதூக்கியது.

சட்டபூர்வமான திருமணம் நடைபெறுமுன் பிறந்த குழந்தைகளுக்கும் சட்டபூர்வமான அந்தஸ்து அளிக்க வழிசெய்யும் சட்டபூர்வமாக்கல் மசோதா விவாதத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது பேசிய செனட்டர் எஸ். நடேசன் கியூ. ஸி. இந்தச் சட்டத்திருத்தம் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே கொண்டுவந்திருக்கப்படவேண்டும். இப்பொழுதாவது கொண்டுவந்ததற்கு பாராட்டுகிறேன் என்று சொல்ல—

சபைத்தலைவர் செனட்டர் ரத்னயக்கா குறுக்கிட்டு இப்படியான விஷயங்களில்தான் செனட்சபை பயனுள்ள சேவை செய்யமுடியும் என்று எடுத்துக்காட்டினார்.

1959-ல் அரசாங்கத்தால்

பிரச்னையைத் தீர்த்துவைக்க 10 வருடங்களின் பின்னர்தானா சட்டம்கொண்டு வரப்படவேண்டும் என்பதுதான் செனட்டர் எஸ் நடேசன் கியூ ஸியின் வருத்தம்!

பெரும்பிரச்சாரத்துக்கும் புகழுக்கும் துணைசெய்யும் சட்டவிதிகளை அமுல் நடத்த முன்னிற்பார்கள் ஆனால் மனிதவாழ்வின் சிக்கல்களைக் களைய உதவிசெய்யும் இப்படியான சாதாரண திருத்தங்களைச் செய்ய பத்து வருடங்கள் காத்திருக்கவேண்டியதிருக்கிறது. அரசியலார் விசாரணைககமிஷன்கள் நியமித்து என்ன பயன்? அவற்றின் அறிக்கைகள் எல்லாம் தூசுபடிந்த நிலையில் தூங்குகின்றன என்று செனட்டர் நடேசன் புகார் தெரிவித்தபோதுதான் செனட்சபைத் தலைவர் ரத்னயக்கா குறுக்கிட்டு, "இப்படியான பிரச்னைகளைத் தீர்க்கத்தான் செனட்சபை மிக உதவியாக இருக்கும்" என்று நமது அரசியல் அமைப்புத் திட்டத்தைஅமைத்து அதன் கீழ் செனட்சபைக்கும் வழி வகுத்தவர்களின் அபிலாஷையை நாசூக்காகக் கூறினார்.

"எங்களிலும் குறையிருக்கத்தான்செய்கிறது." என்று சொல்லி அமைச்சரைப் பாராட்டிவிட்டு அமர்ந்துவிட்டார் செனட்டர் நடேசன்.

## சமசமாஜிகளும் தமிழ்மொழியும்

இதற்குமுன் நெற்காணிச் சட்ட திருத்த மசோதாவொன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சமசமாஜக் கட்சித் தொழிற்சங்கவாதியான செனட்டர் டி ஜி வில்லியம் தனக்கே உரித்தான 'கரகரப்பான' கம்பீரமான குரலில் 1958-ல் நெற்காணிச்சட்டத்திற்கு எதிராக வாக்களித்தவர்கள், இன்று மக்களிடையே தலைகாட்டவேண்டும் என்பதற்காக, அதனை ஆதரிப்பதுபோல் காட்ட திருத்தச்சட்டத்தைக்

# திருமலைச் செய்திகள்

திருகோணமலை, ஞாயிறு சாம்பல் தீவு இ. போ. ச, பஸ்சேவை சீரான நிலையில் இல்லையென பொதுமக்கள் திருமலை இ. போ, ச. அதிகாரிக்கு புகார் செய்துள்ளனர்.

0 0 0

## "அவகாசம் தருக"

சாம்பல் தீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் விவசாயக்கடன் பெற்று வெங்காயம் பயிர் செய்த விவசாயிகள் வெள்ள அழிவுகாரணமாக தமது விவசாயக்கடனை கட்டுவதற்கு அவகாசம் தருமாறு திருமலை அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளனர்.

## இளைஞர் முயற்சி

சாம்பல்தீவுவடலிப்பிள்ளையார் கோயில் விக்கிரகம் திருட்டுப் பேனதையிட்டு புது விக்கிரகமொன்று ஆலயத்துக்குள் வைப்பதற்கு இப்பகுதி இளைஞர்கள் முயற்சி செய்து வருகின்றார்கள்.

0 0 0

## பதவி நீக்கம்

குடாக்கரை கிராமசபையின் 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஜி. நெப்போசிங்கோ கிராமசபையின் மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்கு சமூகமளிக்காத காரணத்தினால் உள்ளூராட்சிச் சட்டத்துக்கிணங்க அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். விரைவில் 5-ம் வட்டாரத்தில் இடைத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது.

0 0 0

## நூலகம் திறப்புவிழா

கந்தளாய்ப் பட்டினசபையினால் நிறுவப்பட்டிருக்கும் பொது நூலகம் பெப்ரவரியில் நடைபெற விருக்கும் உள்ளூராட்சி வாரத்தின்போது உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. வாமதேவனால் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

0 0 0

## விவசாயிகளுக்கு நில வசதி

திருமலை மாவட்டத்திலுள்ள ஆற்றங்கரையோரப் பகுதிகள் உபஉணவுத்திட்டமொன்று நிறுவுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது இதற்கு முன்னோடியாக யான் ஓயா ஆற்றங்கரைப் பகுதியில் 30 விவசாயிகளுக்கு ஆளுக்கொரு ஏக்கர் வீதம் நிலம் கொடுத்து உப-உணவு பயிரிட, வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது.

0 0 0

## இவர்கள் கஷ்டம்

தென்னைமரவடிப்பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு போக்குவரத்து வசதிகள்தடைப்பட்டிருப்பதினால் இங்குள்ள மக்கள் உணவுப் பொருட்களைப் பெறமுடியாமல் திண்டாடுகின்றனர்.

0 0 0

## நியமனம்

கஞ்சிமடம் மகாவித்தியாலயத்தில் உப அதிபராகக் கடமையாற்றிய திரு. ஜே. யோகரத்தினம் மூதூர்ப் பகுதி எண்கணித ஆசிரியர்களுக்குப் பயிற்சி ஆசிரியராகநியமிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

## 75 குடும்பங்களுக்கு வீடு

உப்பு வெளியில் கடல் தொழிலாளர் வீடமைப்புத் திட்டமொன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. இவ் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 75 வீடுகள் நிறுவப்பட்டு, 75 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

# "மன்னாருக்கு புதிய செயலகம் வேண்டும்"

## எழுது வினைஞர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் "மன்னார் கச்சேரிக கட்டிடம் மிகவும் பாழடைந்துள்ளது. அங்கு செய்பவர்கள் எந்த வேளையிலும் இககட்டிடம் இடிந்துவிடுமோ எனப் பீதியடைந்துள்ளனர். கட்டிடத்தின் இத்தகைய நிலைமை மட்டுமின்றி சாப்

டப்படுகிறார்கள். ஆதலால் சகல வசதிகளோடும் கூடிய எல்லா இலாகாப் பிரிவுகளும் அமைந்த அரசாங்க செயலகம் ஒன்று மன்னாரில் நிறுவப்படவேண்டும்."

இவ்வாறு கோரி உள்நாட்டமைச்சருக்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்

# தமிழ்ப்பல்கலைக்கழகம் பரவலாக அமைய வேண்டும்

தமிழ்ப் பல்கலைக் கழகம் எங்குளப் படி அமையவேண்டுமென்பது பற்றிய தமது கருத்தை தெரிவிக்கும் மகஜ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கப்பட்டபோதே வடக்கிலும் ஒரு கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. எக்கலை கைத்தொழில்பேட்டை பலவிதத்திலும் வளர்ச்சியடைந்துள்ளது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட பப் பொருள்கள் இப்போது நல நாட்டிலேயே உற்பத்திசெய்யப்படுகின்றன. வெளிநாட்டுப் பொருள்களின் தரத்துக்கு ஈடாகவும் அவற்றைவிடச் சிறப்பாகவும் இங்கு உற்பத்தியாகும் பொருள்கள் விளங்குகின்றன. வடபகுதியிலும் நமது நாட்டுக்குத் தேவையான பல பொருள்களை உற்பத்திசெய்யக்கூடிய மூலப்பொருள்கள் நிறைய இருக்கின்றன, இங்கு ஆள் பலத்துக்கும் மூளைப்பலத்துக்கும் கூடக் குறைவில்லை. இவற்றைப் பயன்படுத்துவதில்தான் வடபகுதியின் முன்னேற்றம் மட்டுமல்ல கப்படுவது மட்டுமல்லாமல் வர்த்தகம், போக்குவரத்துத் தொடர்பின் மூலமும் வடக்கிலுள்ள பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழிபிறக்கும் என்பதையிட்டு வடபகுதி மக்கள் மகிழ்ச்சியடைய இடமுண்டு.

பொலிகண்டியில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலையும், வடக்கில் பெரியஅளவில் படகு கட்டும் நிலையம் ஒன்றும் நிறுவுவதற்கும் கைத்தொழில் அமைச்சரின் வடபகுதி விஜயம் உதவ வேண்டும்.

திரு. பிலிப்குணவர்த்தன கடற்றொழில் அமைச்சராகவும் இருப்பதால் கடற்றொழிலில் நல்ல வாய்ப்புள்ள வடபகுதியில் மீன்பிடித்தொழிலை மேலும் விருத்திசெய்வதற்கும் அமைச்சரின் வடபகுதி விஜயத்தை இங்குள்ளோர் பயன்படுத்த முன்வருவது விவேகமாகும்.

# இன்றைய பலன்

## சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** வருமானத்தில அபிவிருத்தி காணப்படுகின்றது. கலந்த சில நாட்களாக நிலவிவந்த தயக்கநிலையில் இன்று நல்ல திருப்பம் ஏற்படும்' பிறந்தகத்தில் இருந்து அழைப்பிதழ் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

**ரிஷபம்-** வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலின் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். அதிக வருவாய்க்கு இடம் உண்டு. கலைஞர்களுக்கு பொன்னான தினம்.

**மிதுனம்-** இனிக்க பேசுவோர் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும், பிறந்தகத்தின் நினைவு திடீர் என தலைதூக்கும். கடமையில் சோர்வு தென்படும் மனத்திடம்வேண்டும்.

**கடகம்-** மனம்நிறைந்த வாழ்வு, மக்களால் மகிழ்ச்சி. இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். உறவினர்கள் உதவிக்கு ஓடிவருவர், செல்வாக்கு பெருகும்.

**சிம்மம்-** ஆணவப்போக்கு அடிசறுக்க வைக்கும். பின்னணியில் மோசடி வேலை நடைபெறலாம். மேலதிகாரியின் கழுகுப்பார்வை உங்களை வட்டம் இடலாம். முன் யோசனையுடன் செயலாற்றுக,

**கன்னி-** வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும் மோகனவாழ்வு கிட்டும் முன்னேற்ற வாழ்வும் உண்டு. முதியவர் ஆசியுண்டு. தாய்வழி தனமும் சேரும்.

**துலாம்-** மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாக கிடைக்கும். வாகன நலனுக்கும் இன்று இடம்உண்டு.

**விருச்சிகம்-** எதிர்பார்த்த முடிவில் ஏமாற்றம் தென்படும். உடன்பிறந்தவர்களாலேயே பல தொல்லைகள் தோன்றக்கூடும். சிலரின் கெடுபிடி நடவடிக்கை ஆத்திரத்தை ஏற்படுத்தலாம்,

**தனுசு-** இல்லத்தில் இனிமை தவழும். வெளியிடத்து தொடர்புகள் பெருகும், இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கு உயரும்.

**மகரம்-** எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம்தாக்கும். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

**கும்பம்-** நினைத்தது நடக்கும் பந்துசனங்களின் கொண்டாட்டம் உண்டு. பிதாவழி மூலம் எதிர்பாராத பொருள்வரவு கிடைக்கலாம், பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும்.

**மீனம்-** வியாபாரத்துறையில் துரித முன்னேற்றம் புதிய துறைகளில் மனம் நாடுதல். பயன்தரும் பிரயாணம் நண்பர்களின் ஆதரவு இவற்றுடன் தெய்வத் வர் துணையும் உண்டு. சுபதினம்.

# [illegible] வேண்டும்

**தமிழ்ப் பல்கலைக் கழகம் எங்குளப்படி அமையவேண்டுமென்பது பற்றிய தமது கருத்தை தெரிவிக்கும் மகஜரொன்றை கைதடிக் கிராமமுன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. ச. இராமலிங்கம் தேசிய உயர் கல்விச் சபை உபகுழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.**

சிங்களக் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கு இலங்கையில் நான்கு பல்கலைக் கழகங்கள் இயங்குகின்றன. குறிப்பாகக் கூறின் வித்தியாலங்கார, வித்தியோதய பல்கலைக் கழகங்களைக் குறிப்பிடலாம். ஆனால்தமிழ் மக்கள் பெரும்பான்மையாகவதியும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்க் கலாச்சாரத்தை குறிப்பாக குறிப்பிடின்சைவசமயத்தை வளர்ப்பதற்கும் வருங்காவ தமிழ்ப் பிள்ளைகளை சைவ முறைப்படி வாழ வழி வகுக்க யாழ்ப்பாணத்தில்இந்து கலாச்சார பல்கலைக்கழகம் முக்கிய அவசிய தேவைகளில் ஒன்றாகும்.

இப்போதுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழி மூலம் போதனை அளிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தாலும் தமிழ்க் கலாச்சாரத்தை, சைவசமயத்தை வளர்ப்பதற்கு வாய்ப்பில்லை. கொழும்பில் இயங்கும் பல்கலைக் கழகத்தில் படிப்படியாக தமிழ் மூலம் போதனைப் பிரிவு குறைக்கப்பட்டேவருகிறது. ஆகவே இந்நிலையில் தமிழ் பேசும் மக்கள் சுபீட்சநிலையடைய வேண்டுமாயின் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வதியும் இடங்களில் அவர்களுக்கென பல்கலைக்கழகம் ஸ்தாபித்தல் முக்கியமாகும். யாழ்ப்பாணத் தமிழர், மன்னார்த்தமிழர், திருகோணமலைத் தமிழர் மட்டக்களப்புத் தமிழர் என்ற பாகுபாட்டை இனிமேலும் வளரவிடாது தடுப்பதற்கும் இம் மக்களை ஒற்றுமைப்படுத்தவும் அரசாங்கத்திற்குப் பொருளாதார விடயத்தில் தலையிடி கொடுக்காது இருப்பதற்கும் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அமைத்து அதன் கிளைகளை கீழ்க்காணும் இடங்களில் அமைக்கலாம்.

(1) இராமநாதன் கல்லூரியில் சைவ, சமய' சங்கீதம் இந்து கலாச்சாரம் போன்ற இதர பாடங்களை கற்பிக்கலாம்.

(2) பரமேஸ்வராக் கல்லூரியில் வைத்தியம் சட்டப் படிப்பு முதலிய துறைகளை கற்பிக்கலாம். ஏனெனில் வைத்திய கல்லூரி மாணவர் யாழ்நகர் ஆஸ்பத்திரியில் வைத்திய செயல்முறை பழகுவதற்கும் உயர்தர நீதிமன்றங்களில் சட்டப் படிப்பு மாணவர்களுக்கு செயல் முறை அறிவை வளர்ப்பதற்கும் இவ்விரு ஸ்தாபனங்களும் பரமேஸ்வராக் கல்லூரிக்கு அருகாமையில் இருப்பதேயாகும்.

(3) டிரிபேக் கல்லூரிசாவகச்சேரியில் நவீனவிஞ்ஞான முறை போன்ற போதனைகளை கற்பிக்கலாம். ஏனெனில் கைதடி மறவன்புலோ கிளிநொச்சி, பூநகரி போன்ற இடங்களிலேயே பெரும் பான்மையான மக்கள் விவசாயிகளாக திகழ்கிறார்கள். குறிப்பாக கிளிநொச்சித் தொகுதியிலேயே பெரிய குளங்கள், விவசாயம் கூடிய இடமாகும். ஆகவே அரசாங்கம் உணவுப் பெருக்கத்தையே குறிக்கோளாகக் கொள்ளும் பட்சத்தில் சாவகச்சேரியிலேயே விவசாயப் போதனைப் பல்கலைக்கழகம் அமைத்தல் சாலச் சிறந்ததாகும்.

(4) மன்னாரில் கிறிஸ்தவ மக்களே பெரும்பான்மையாக வதியும் இடமாகும், ஆகவே அவ்விடத்தில் கிறிஸ்தவ சமய போதனைகளும் மீன்பிடி கைத்தொழில் போதனைகளும் இதர போதனைகளும் அடங்கிய பல்கலைக் கழகம் அமைத்தல் வேண்டும்.

(5) ஆசியா விலேயே இயற்கையான துறைமுகமெனப்பெயர்பெற்ற இடம் திருகோணமலையேயாகும். ஆகவே திருகோணமலையில் பொறியியல், விஞ்ஞானம் போன்ற இதர பாடங்களை போதிக்கலாம்.

(6) மட்டக்களப்பு நகரத்திலும் அதனைச் சார்ந்துள்ள கிராமங்களிலும் பெரும்பான்மையான மக்கள் இஸ்லாம் மதத்தவர்களே. ஆகவே இஸ்லாம் மத போதனையையும் வர்த்தகம் கணக்கியல் முதலிய இதர பாடங்களையும் இவ்விடத்தில் போதிக்கலாம்.

டர் ரத்ஞயக்கா குறுக்கிட்டு இப்படியான விஷயங்களில் தான் செனட்சபை பயனுள்ள சேவை செய்யமுடியும் என்று சுட்டிக்காட்டினார்.

1959-ல் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு விசாரணைக் கமிஷன் திருமண விவாகரத்து சட்டங்களில் செய்யப்படவேண்டிய திருத்தங்களைப்பற்றி ஒரு விரிவான அறிக்கை சமர்ப்பித்திருந்தது. அந்த விசாரணைக் கமிஷனின் சிபார்சுகளில் ஒன்றின் அடிப்படையில்தான், திருமணமாகாத நிலையில் பிறந்த குழந்தைகளுக்கும் சட்டபூர்வமான அந்தஸ்து அளிக்கும் இம் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

### எஸ். நடேசனின் அங்கலாய்ப்பு

அரசாங்கம் நியமித்த விசாரணைக்கமிஷனே 1959ல் சிபார்சுசெய்திருக்க. மனிதாபிமான பிரச்னைகளில் ஒன்றான இந்தப் பெரும் டத்திற்கு எதிராக வாக்களித்தவர்கள், இன்று மக்களிடையே தலைகாட்டவேண்டும் என்பதற்காக, அதனை ஆதரிப்பதுபோல் காட்ட திருத்தச்சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று யூ என் பி யைச் சாடினார்.

உடனே செனட்டர் எம் டி கிச்சிலான் குறுக்கிட்டு யூ என் பி யை மட்டும் குறை சொல்கிறீரே, 'தமிழ் மொழி சம்பந்தமாக உங்கள் கட்சியான சமசமாஜக்கட்சி என்ன செய்தது?' என்று பொல்லாத சொல்லம் பொன்றை ஏவினார்.

''இப்போது நெற்காணிச் சட்டத்தைப் பற்றித்தான் பேசுகிறோம். தமிழ்மொழியைப்பற்றி விவாதிக்கும் போது, எங்கள் கட்சியின் நிலையை விளக்குகிறேன்'' என்று சொல்லித் தப்பிக் கொண்டார் செனட்டர் வில்லியம்]

# சத்தியவழியில் அரசியலைத் திருப்ப ஒரு சர்வோதய முன்னணி

புங்குடுதீவு, ஞாயிறு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தீவுத் தொகுதியில் சர்வோதய வேட்பாளரைப் போட்டியிடும் திரு ப. கதிரவேலு கீழ்க்காணும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

சகல மதங்களையும் இனங்களையும் இணைக்கும் சர்வோதயமே இன்றைய அரசியல் பிரச்னைகள் உட்பட சகல பிரச்னைகளுக்கும் வழிகாட்டக்கூடியதாய் இருக்கிறது. ஆனால் அது மகாத்மாகாந்திக்குப்பின் அரசியலில் ஈடுபடுத்தப்படாமல் இருப்பதால் அதனால் வரக்கூடிய பூரணபயன்களையும் நாம் பெறுதவர்களாய் இருக்கிறோம். அத்தவறை நீக்கி இன்றைய ஊழல்மலிந்த அரசியலிலும் சத்தியத்தைப் புகுத்துவதற்காக ஓர் சர்வோதய அரசியல் முன்னணியை இலங்கையில் நாம் உருவாக்கத் தீர்மானித்துள்ளோம். ஏற்கனவே அதற்காகப் பலருடன் தொடர்புகொண்டுள்ளோம்.

உண்மையான தேசிய ஐக்கியத்தை இத்தகைய சர்வோதய அரசியல் முன்னணியே உருவாக்கக்கூடியதாய் இருக்கும். தமிழர்களின் பிரச்னைகளை மட்டுமல்ல, முழு இலங்கைமக்களினதும் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்னைகளையும் சர்வதேசப் பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு அதுவே சிறந்த வழியைக் காட்டுவதாக இருக்கும். தமிழர்களின் பிரச்னைகளை வெறும் மொழிப் பிரச்னையாகக் கருதி வந்ததுதான் இதுவரை தமிழ்ப்பகுதிஅரசியல் கட்சிகள் விட்ட தவறாகும். தமிழ் மக்களின் பிரச்னை முழு நாட்டினதும் உலகத்தினதும்சமூக, பொருளாதார அரசியல், சமயப்பிரச்னைகளுடன் ஒன்றாகக் கலந்த ஓர் பிரச்னையாகும். அவற்றோடு சேர்த்தே தமிழர்களின் பிரச்னைகளையும் தீர்க்கமுயல வேண்டும். அவற்றைத் தீர்ப்பதற்கு சத்தியத்தை அழுத்தும் சர்வோதயமே இனி வரும்புதுயுகத்துக்குரிய வழியாகும்.

அதனால் எதிர்வரும் பொதுத்தேர்தலில், ஒரு விதபரிசோதனையாக, குறைந்தது மூன்று தொகுதிகளிலாவது சர்வோதய அரசியல் முன்னணியினர் போட்டியிட வேண்டுமென்றும் அவர்களை முடியுமானால் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யக்கூடிய விதத்தில் பிரசாரத்தை நடத்த வேண்டுமென்றும் தீர்மானித்துள்ளோம். தெரிவு செய்யப்படும் சர்வோதய அரசியல் முன்னணியினர் நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரத் துறைகளில் சத்திய எழுச்சிக்கு உதவும் எந்த அரசாங்கத்துடனும் இடதுசாரி வலதுசாரி என்ற வித்தியாசங்களற்று ஒத்துழைப்பர். சமூக, பொருளாதார சமத்துவத்தையும் சமய ஒற்றுமையையும் இன ஒற்றுமையையும் உருவாக்குவதே அவர்களது இலட்சியமாகவிருக்கும் அவற்றுக்கு அரசாங்கம் உதவாதஒவ்வொரு சமயத்திலும் நாட்டின் மனச்சாட்சியாய் நின்று தமது சத்திய எதிர்ப்பை வெளிக்காட்டுவர். எந்த விதச் சர்வாதிகாரத்தையும் ஆதரிக்கார். அதேபோல் தேர்தல் பிரசாரத்தோடு அந்தந்த இடங்களில் 'களம்' என அழைக்கப்படும்கிராம, நகர பாராளுமன்றங்களை உருவாக்க முயல்வர். நடைமுறையிலுள்ள பாராளுமன்ற ஆட்சியை விட முன்னேற்றமான ஒரு சர்வோதய சனநாயகப் பாராளுமன்ற ஆட்சியை அவற்றின் மூலம் உருவாக்க முயல்வர்.

...டம் மிகவும் பாழடைந்துள்ளது. அங்கு செய்பவர்கள் எந்த வேளையிலும் இககட்டிடம் இடிந்துவிடுமோ எனப் பீதியடைந்துள்ளனர். கட்டிடத்தின் இத்தகைய நிலைமை மட்டுமின்றி சாப்பாட்டறை மலசலகூடம் போன்ற மற்றைய வசதிகளும் இல்லாமல் இங்குள்ள ஊழியர்கள் மிகவும் கஷ் எல்லா இலாகாப் பிரிவுகளும் அமைந்த அரசாங்க செயலகம் ஒன்று மன்னாரில் நிறுவப்படவேண்டும்.''

இவ்வாறு கோரி உள்நாட்டமைச்சருக்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் செயல் கமிட்டிச் செயலாளர் திரு இ. இராமநாதன் கடிதமொன்று அனுப்பியுள்ளார்.

# உள்ளூராட்சி வாரத்தில் இரு பெரும் வேலைத்திட்டம்
## புங்குடுதீவில் துரித ஏற்பாடு

புங்குடுதீவு, ஞாயிறு

புங்குடுதீவில் உள்ளூராட்சி வாரத்தையெட்டி வருகிற 8-ம்திகதி முதல் 13-ம் திகதிவரை சமயதினம், தொழில் மகத்துவதினம். சுகாதார ஆரோக்கியதினம், சேரி ஒழிப்பு வீடமைப்புத் தினம், நூல்நிலையம் இலக்கிய விழா, கலாச்சார விளையாட்டுத்தினம் முதலியனவற்றை பிரதிதினமும் நடாத்த புங்குடுதீவு கிராமசபை தீர்மானித்துள்ளது.

வருகிறமாதம் 8-ம் திகதி தீவிலுள்ள சகல இந்துக் கோவில் களிலும், தேவாலயங்களிலும் ஒருமித்து மங்கள வாத்திய, மணி ஓசை முழங்க காலைவேளைப்பூசையுடன் சமயதினம் ஆரம்பமாகும். புங்குடுதீவு கிழக்கு, மேற்குப்பகுதியில் இரண்டு பெரிய வேலைத்திட்டங்கள் தொழில்மகத்துவ தினமான 9-ம் திகதிஆரம்பிக்கப்படும். 10-ம் திகதி சுகாதார ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு இலவச பால்மாவிநியோகம் கண்காட்சி, இலவச படக் காட்சிகள் இடம்பெறும்.

11-ம் திகதி மாக்கொண்ட என்ற குடியேற்றத்திட்டத்தில் வீடுகள் திருத்தம்செய்யப்படும். 12-ல்குழந்தைகள் நூல்நிலையங்கள் ஆங்காங்கே திறக்கப்படும். கடைசித் தினமான 13-ம்திகதி கிராமசபைமைதானத்தில் கலாச்சார விளையாட்டு விழா இடம் பெறும்.

# கொலை வழக்கு ஒத்திவைப்பு

மன்னார், ஞாயிறு

தாராக்குண்டு நூர்தீன் கொலைவழக்கு நேற்று முன்தினம் இங்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்தமாதம் தாராக்குண்டைச் சேர்ந்த நூர்தீன் என்பவர் எருக்கலம்பிட்டித் தியேட்டரில் வைத்துக் கத்தியால் குத்தப்பட்டதையடுத்து, அவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் நூர்தினின் உடலைப் பரிசோதனைசெய்த டாக்டரின் சாட்சியத்தைத் தொடர்ந்து நீதவான் திரு. திசநாயகா மேல் விசாரணையை அடுத்தமாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# முதல் முஸ்லீம் மேயர்

மாத்தளை, ஞாயிறு

நேற்று முன்தினம் நடைபெற்ற மாத்தளை நகரசபை மேயர் தெரிவில் முதல் தடவையாக ஒரு முஸ்லிம் மேயராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜனாப் எம் ரி ஹுசெயின் மாத்தளை நகரசபையின் மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார், உதவி மேயராக சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு எம் பி யாப்பா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு வைகாசி மாதம் 19-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை ஆரம்பம்

ஈழநாடு
THE EELA NADU

கைத்தொழில்
சிறப்பிதழ்
19-1-1970

# கைத்தொழில் அமைச்சரே வருக; வடக்கு வளரட்டும்!

கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனா இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார். வடபகுதிக்கு மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுவரும் திரு. பிலிப்குணவர்த்தனா வடபகுதிக்கு வருவது இதுதான் முதல்தடவையல்ல. என்றாலும் இலங்கையின் சரித்திரத்தில் குறிப்பாக வடபகுதியின் வரலாற்றில் கைத்தொழில்அபிவிருத்திக்கும் நாட்டின் பொருளாதாரவிருத்திக்கும் வழிவகுக்கும் கைத்தொழிற் பேட்டையொன்றை அச்சுவேலியில் அமைக்கும் வேலைகளை ஆரம்பித்து வைப்பதற்காக அவர் இன்று வருகிறார். யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள மூலவளப் பொருள்களைப் பயன்படுத்தி புதிய கைத்தொழில்களை ஆரம்பித்து வடபகுதியினதும் நாட்டினதும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் வடபகுதியில் வேலையின்றியிருக்கும் வாலிபர்கள் பலருக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கவும் வகைசெய்யும் கைத்தொழிற் பேட்டையின் வேலைகளை ஆரம்பித்து வைப்பதற்காக வரும் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சரை வருக. வருக என்று வடபகுதி மக்கள் வரவேற்கின்றார்கள்.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை அச்சுவேலியை மட்டுமல்ல யாழ்ப்பாணக் குடாநாட்டையே கைத்தொழில் நகரமாக்க வேண்டும்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை கைத்தொழில் அபிவிருத்திக்கு வழிசெய்யும் அதேசமயம் பொலிகண்டியில் கண்ணாடித் தொழிற்சாலை அமைத்து அந்தத் தொழிற்சாலையுடன் சிமெந்து உற்பத்தி ஆலை பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை ஆகியவையும் சேர்ந்து கனகரகத் தொழில் வவர்ச்சிக்கும் உதவவேண்டும்.

காங்கேசன் துறைமுக அபிவிருத்தியுடன் கைத்தொழில், கனரகத்தொழிலும் விருத்தியடையுமானால் வடபகுதி மட்டுமல்ல நாடே சுபீட்சப் பாதையில் முன்னேறிச் செல்லும்.

இன்று இங்கு வரும் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனா சொல்வீரர் மட்டுமல்ல, செயல் வீரருமாவார் அவர் வடபகுதியிலுள்ள மூலவளங்களைப் பயன்படுத்த முன்வந்தாரானால் உழைப்பாளிகளான வடபகுதி மக்களின் உதவியும் ஒத்துழைப்பும் நிச்சயம் கிடைக்கும். நாடும் முன்னேறும்.

★உணவு
★எண்ணெய்
★ களிப்பொருள்

## கடலில் பெருவளம்

எஸக்ஸ், கனடிக்கக்ட் — பூமிக்கு மேலே எத்தனையோ மைல்களுக்கப்பால் பறந்த விண்வெளியை ஆராய மனிதன் எவ்வளவோ நேரமும் முயற்சியும் பணமும் செலவிடுகிறான். பூமியின் மேற்பரப்பில் பத்துக்கு ஏழு பங்காக இருக்கும் கடல்களை ஆராய்வதற்கு இதைவிட இன்னும் கூடுதலாக நமது சக்திகளைப் பயன்படுத்தக் கூடாதோ? கடலிலும் அதன் அடியிலும் ஆராயப்படாமல் கிடக்கின்ற வளங்ள்கபல.

லூதர்செஸ்டர் போல்ஸ்

காலம் காலமாகக் கடல்கள் மீன்களை தந்து வருகின்றன. நாடுகளுக்கிடையிலும் பெரும் நிலக்கண்டங்களுக்கிடையிலும் அவை கப்பல் போக்குவரத்துக்கு வழியாய் அமைந்துள்ளன. இப்போது பல ஆண்டுகளாகக் கடற்கரையை ஒட்டிய ஆழமற்ற கல்களின் அடியிலிருந்து பெட்ரோல், இயற்கை வாயு, கனிப்பொருள்கள் ஆகியவை எடுக்கப்படுகின்றன. கடல்நீரிலிருந்து மக்னீஷியம் முதலிய ரசாயனப் பொருள்கள் எடுக்கப்படுகின்றன.

கடலில் இன்னும் கண்டெடுக்கவேண்டிய வளம் நிறைய இருக்கிறது. உணவு எண்ணெய், தனிப்பொருள் இவற்றுக்குத்தேவை வபெருகி வருவதால், கடல்களை இன்னும் ஆராய்ந்து வளம்கண்டு பயன்படுத்தவேண்டும்.

இக் காலத்தில் ஏற்பட்டுள்ள இத் தேவைகளின்பயனாக கடலில் விஞ்ஞானத்துக்குப் புதியதோர் ஊக்கம் பிறந்துள்ளது. கடலிலும் அதன் அடியிலும் உள்ள வளங்களைக் கைக்கொள்வதற்கு முன் அவற்றின் உண்மை, குணங்கள் இருக்குமிடம் ஆகியவற்றைக் கருத்தோடு ஆராய்ந்திட வேண்டும்.

viiiம் பக்கம் பார்க்க.



## "வரலாற்றில் முக்கியம் வாய்ந்த தினம் இது"

—அமிர்தலிங்கம்



யாழ்ப்பாணத்தில் தலைதூக்கி நிற்கின்ற வேலையில்லாந் திண்டாட்டத்தை தீர்ப்பதற்கு கைத்தொழில் அபிவிருத்தி மிகமிக அவசியமாகும்.

அதற்குப் பொறுப்பான அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பல காலமாக நாம் கோரிவந்த கைத்தொழில் பேட்டையின் வேலைகளை ஆரம்பித்துவைக்கும் இத்தினம் யாழ்ப்பாண மக்களின் வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும்.

தென்னிலங்கையில் தமது மூலதனங்களைக் கொண்டு கைத்தொழில்களை ஆரம்பிக்கும் தமிழ் தனவந்தர்கள் நமது பகுதியின் முன்னேற்றத்தையும் நமது வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் மனதில் கொண்டு இக்கைத்தொழில் பேட்டையை பூரணமாகப் பயன்படுத்துவார்கள் என்று நம்புகின்றேன்.

அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனா அவர்கள் கடற்றொழிலுக்குப் பொறுப்பானவர் என்பதும் அது தமிழ்பேசும் மக்களுடைய ஜீவாதாரமான தொழில் ஒன்று என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நாம் நினைவுகூர வேண்டியிருக்கிறது.

மயிலிட்டி மீன்பிடித்துறைமுக வேலையும் வடஇலங்கையில் மீன்பிடித் தொழில் அபிவிருத்திக்குத் தேவையான மற்றும் திட்டங்களும் அமைச்சரின் வருகையால் துரிதப்படும் என நம்புகின்றேன்.

## அச்சுவேலிகைத்தொழில் நகராகவளரும்

கோப்பாய் எம். பி. செய்தி



அச்சுவேலியில் 65 ஏக்கர் நிலத்தில் நிறுவப்படும் கைத்தொழிற் பேட்டைக்கான வேலைகளை கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனா இன்று ஆரம்பித்துவைக்கின்றார். கைத்தொழிற்பேட்டை நிறுவப்படும் அச்சுவேலி அமைந்துள்ளபோப்பாய்த்தொகுதியின் ஆட்சிமன்றப்பிரதிநிதியா திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பின்வரும செய்தியை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு அச்சுவேலியில் நிறுவப்படும் கைத்தொழிற் பேட்டை அத்திவாரமாக அமையும். கைத்தொழில் பேட்டை யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை மட்டுமல்ல நாட்டின் பொளாதாரத்தை விருத்திசெய்ய உதவும்.

அச்சுவேலியில் அமையும் கைத்தொழில் பேட்டையினால் பல நூற்றுக்கணக்கான வாலிபர்களுக்கு வேலைவாய்ப்புக்கிடைக்கும். இப்பகுதியில் ஒரு கைத்தொழில் பேட்டையை நிறுவுவதற்கு பல நாட்களாக எடுத்த முயற்சி இன்று கைகூடுவதைக்குறித்து நான்மிக மகிழ்ச்சியடைகிறேன். இந்தக் கைத்தொழிற் பேட்டை அச்சுவேலியை ஒரு கைத்தொழில் நகரமாக்குமென்பது நிச்சயம்.

எனது தொகுதியான கோப்பாய்த் தொகுதியில் இக்கைத்தொழிற் பேட்டை நிறுவப்படுவதில் இரட்டிப்புமகிழ்ச்சியடையும் அதேசமயம் அதைஇங்கே நிறுவமுன்வந்தகைத்தொழில் அமைச்சருக்கு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைப்பால் உயர்ந்த உற்பத்தித் தொழிற்சாலை

1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஒரு சிறு கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டதுதான் சிலோன் இண்டஸ்றியல் என்ஜினியரிங் வேக்ஸ் ஸ்தாபனம்.

மிகவும் குறுகிய காலமான இரண்டு வருடங்களுக்குள் இந்த ஸ்தாபனம் மிகவும் பரந்த வேலைகளைச் செய்துள்ளது என்றால் அது மிக வியப்புக்குரியதுதான். இதற்குக் காரணம் இரண்டு:-

உற்சாகமான தொழிலாளர்கள். உழைப்பால் உயர்ந்த தொழிற்சாலை அதிபர்.

யாழ்ப்பாணம் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இத்தொழிற்சாலையைத் திறந்து வைத்தார். காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் சிறப்பான பயிற்சி பெற்ற சுன்னுகத்தைச் சேர்ந்த திரு, பி. மகாலிங்கம் இத்தொழிற்சாலையின் அதிபர். இத்தொழிற்சாலையில் பாவிக்கப்படும் இயந்திரங்களைகள் இங்கு தயாரிக்கப்பட்டவை என்பது இத்தொழிற்சாலைக்கு மற்றொரு சிறப்பாகும்.

சுமார் இரண்டு லட்சம் ரூபா வரையில் முதலீடு செய்யப்பட்டு இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. 36 தொழிலாளர்கள் இங்கு வேலை செய்கிறார்கள், இதைவிட வேலை பயில்பவர்களும் பலரும் இங்கு பயிற்சி பெறுகிறார்கள்.

வார்ப்பு வேலைகள். கடைச்சல் தொழில்களில் இத்தொழிற்சாலை முதன்மை பெற்று விளங்குகின்றது. ''லேத்'' தொழிலில் இலங்கையிலேயே இவர்கள்தான் முதன்மை வகிக்கிறார்களாம்.

இதுமட்டுமன்றி தண்ணீர் இறைக்கும் மெஷினில் மோட்டர் தவிர மிகுதி உபகரணங்களைத் தயாரிப்பதிலும் இலங்கையிலேயே இரண்டாவது இடத்தையும் இவர்கள்தான் வகிக்கிறார்களாம்.

இவர்களது தொழிற்சாலையில்பாவிக்கப்படும் கிறிண்டிங் மெஷின், ட்றில்லிங் மெஷின், ஆயில்பயர்ட் பேணர், கைபிறஸ், லிப்ட் பிறஸ், லேத், பவ்விங் மெஷின், கை ஷீரிங்மெஷின் வயர் பென்டுங் மெஷின், புளோவர் ஸ்மிதி ஆகியன இங்கேயே தயாரிக்கப்பட்டவையாகும்.

இத்தொழிற்சாலைக்கு ஒளிமயமான எதிர்காலம் இருப்பதாக இங்கு வேலைசெய்யும் ஊழியர்களே சொல்லிக் கொள்கிறார்கள்.

## வசந்தா சேலை அச்சகம்

வசந்தம் என்ற சொல்லோ ரம்மியமானது அது குறிக்கும் பருவம் நாலு பருவங்களிலும் சிறந்தது. இறற்கை அன்னை எழிலோடு திகழும் காலம் இப்பருவமேயேயன்றி வேறெப்பருவத்திலுமல்ல, இத்தகைய அழகிய பெயரைக் கொண்டு விளங்கும்'வசந்தா சேலையச்சகமும் பெயருக்கேற்ற அழகோடு பலவர்ணப் பூக்களையும், சோலைகளையும், மயிலையும், குயிலையும், அழகிய நடன மங்கையர்களையும் கொண்டு வசந்தகாலமே அங்கு வருடம் முழுவதும் வந்து ஒழித்துக்கொண்டிருப்பது போல் காட்சியளிக்கிறது, இந்த வர்ணனைகளையெல்லாம் பார்த்துவிட்டு பூஞ்சோலையோ என வசந்தா சேலையச்சகத்தையெண்ணவேண்டாம். இவை யாவற்றையும் அங்கு அழகிய மங்கையர் பல்வேறு வர்ணங்களில் மென்மையான 'வொயில்' சேலைகளில் அச்சடித்து மடித்து அடுக்கடுக்காக வைத்திருக்கிறார்கள்,

யாழ் நகரில் வசந்தாசேலையச்சகம் சேலைகளுக்கு பூவேலைகளை அச்சடித்து விற்பனை செய்வதில் இன்று முன்னணியில் நிற்கிறது. 1962 ம் ஆண்டு இரு மேசைகளோடு சேலையில் அச்சுவேலையை பரிசோதனை செய்து பார்ப்பது என்ற முறையில் ஆரம்பித்த வசந்தா சேலையச்சகத்தார் இன்று 20 மேசைகளுக்கு மேல் போட்டு 60 க்கும் மேலான இளம் மங்கையர்களைக் கொண்டு ஆயிரக் கணக்கான சேலைகளில் அழகிய அச்சு வேலைகளைச் செய்து யாழ்நகர் மக்களுக்கு மட்டுமன்றி கொழும்பு, கண்டி, காலி, நீர்கொழும்பு முதலிய இத்தீவின் பல பகுதிகளுக்கும் அனுப்புகிறார்கள்.

'ஸ்க்றீன் ஸயின்ரிங்' என்னும் இந்த அச்சடிக்கும் முறையை சேலைகளில் மட்டுமன்றி பப்ளின் துணிகள், மற்றும் கதவு, மேசைதுணிகள் ஆகியவற்றிற்கும் செய்து கொடுக்கிறார்கள்.

லங்கா சலுசலாவிடம் வெள்ளைத் துணிகளைப் பெற்று ஆழகியசாயங்களில் பலவித உருவங்களையும் பூவேலைப்பாடுகளையும் செய்து கொடுக்கிறார்கள். இதைவிட யாழ் நகரிலுள்ள பல புடவைக் கடைகளுக்கும் இவர்கள் இவ் வச்சடிப்பு வேலைகளைச் செய்து கொடுத்துப் புகழ் பெறுகிறார்கள். போதிய யந்திர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதனங்கள் இல்லாமையே தங்கள் தொழில் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாகவிருக்கிறதென இத்தாபன

(V-ம் பக்கம்பார்க்க)

நாடு முன்னேற
தொழில் வளரவேண்டும்
தொழில் வளர விளம்பரம் வேண்டும்


S. R. S.
நெசவு நிலையம்

எமது தயாரிப்புகள்:
- 100, 120-ம் நம்பர் சேலைகள்
- 100-ம் நம்பர் வேட்டி சால்வைகள்
- பட்டு வேட்டி — சால்வைகள்
- நெசவு மணிப்புரி சேலைகள்

எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறைவீதி — யாழ்ப்பாணம்
போன்: 296

இன்று யாழ். நகர் வரும்
அமைச்சரை
மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்!

பல வர்ணங்களில்
அச்சுவேலைகள் செய்த சேலைகள்,
கதவு, மேசைத்துணிகள்
ஆகியவற்றிற்கும் புகழ்பெற்றது.

வசந்தா
சேலை அச்சகம்

42, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

கைத்தொழில் அமைச்சர் அவர்களே வருக! வருக!

★ யானை மார்க்
அஸ்பெஸ்டர்ஸ்
கூரைத் தகடுகள்

★ 'குரங்கு' மார்க்
தென்னுபிரிக்காவில்
தயாரிக்கப்பெற்ற
''ஸ்பிரிட்''
'குரங்கு மார்க்'
தோட்ட
மண்வெட்டிகள்

வெளிநாட்டில் தயாரித்த
முள்ளுக் கம்பிகள்
நிர்வேலிச் சங்கத்தினுல் தயாரிக்கப்பெற்ற
★ சிறந்த சீவல் கத்திகள்
★ பாக்கு வெட்டிகள்
★ விட்டுக் கத்திகள்
★ கிண்டிப் பிணைச்சல்கள்
இன்னும்
திறமான எத்தனையோ பாவனைப் பொருள்கள்

★ பூட்டுகள்
★ பிணைச்சல்கள்
சகலவித
பொருட்களும்

★ சினேசம்
இன்னும்
திறமை வாய்ந்த
பெயின்ற் வகைகள்
பித்தளைப் பூட்டுகள்
பிணைச்சல்கள்

குறைந்த விலையில் சிறந்த பொருள்கள்

ஸ்டீல் சன்ஸ்


287-289, ஸ்ரான்லி வீதி, (தொலைபேசி: 7035) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## சமுதாயப் பணிபுரிய முன்னணியில் நிற்பது

# கொழும்பு ஸ்ரூடியோ

காலம் ஓடுகின்றது. காலம் எப்போதுமே திரும்பிப் பார்ப்பதில்லை. இந்த ஓடுகின்ற காலத்துடன் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன. இதை எவற்ருலுமே தடுக்க முடியாது.



மாற்றம் மனிதனையே வெகுவாகப் பாதிக்கின்றது. சிறுவன் வாலிபனுகவும், வாலிபன் முதியவனுகவும் மாறுவதை எவ்வித சக்தியாலுமே தடுக்கமுடியாது. எனவே கடந்த காலத்தில் ஒவ்வொருவரும் தாம் எவ்வாறிருந்தோம் என்பதை அவ்வப்போது எடுத்துக் கொள்ளும் புகைப்படங்களே காட்டுகின்றன.



புகைப்படக் கலையின் நுட்பங்களை அனுசரித்து கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பயனுள்ள சேவை செய்து வருவது யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் அமைந்துள்ள கொழும்பு ஸ்ரூடியோ. யாழ்ப்பாணப் பகுதியில் முதன் முதலாக 'புளக்' தயாரிக்கும் தொழிலை ஆரம்பித்தது கொழும்பு ஸ்ரூடியோவே. இத் தொழிலுக்கு அரசாங்கத்திடம் கொழும்பு ஸ்ரூடியோ அங்கீகாரம் பெற்றுள்ளது. நம்பிக்கையும், நாணயமும் தொழிற் திறமையுமே கொழும்பு ஸ்ரூடியோவின் இலட்சியங்களாகவுள்ளன.

பல்வேறுபட்ட பிரச்னைகளின் தாக்கத்தினுல் இன்றையசமுதாயம் அவசரமாக இயங்கிவருவது கண்கூடு. இவ்வவசரத்தை அனுசரித்து மக்களுக்குப் பணிபுரிவதற்கு முன்னணியில் நிற்கின்றது கொழும்பு ஸ்ரூடியோ.


1. படத்தை ஒருவர் பிடிக்க ஆரம்பித்த எட்டாவது மணித்தியாலத்திலேயே படத்தைக் கையிற் பெறலாம்.

2. ஒருவர் 8 மணித்தியாலங்களுக்குள் ஒரு புளக்கை இங்கு தயார்செய்து கொள்ளலாம்.

3. காலை எட்டுமணிக்கு ஒப்பந்தம் செய்த ஒருவர் மாலை நாலுமணிக்கே றபர் ஸ்டாம்புகளைப் பெறலாம்.

விரைவாகச் செய்வதுடன் கலைநுட்பங்களுடன் வேலைகள் அமையவேண்டுமென்ற கொள்கையையும் அனுசரித்து வருவது கொழும்பு ஸ்ரூடியோ.

வேலைகளைச் செப்பமாகவும், விரைவாகவும் செய்வதற்காக பயிற்றப்பட்ட திறமையும் அனுபவமுமுள்ள ஊழியர்கள் காத்து நிற்கின்றனர்.





புதிய விதமான இயந்திரங்கள் இத்தகைய சேவைக்காகக் காத்துள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக சமுதாயத்துக்குப் பணி செய்ய வேண்டுமென்பதே கொழும்பு ஸ்ரூடியோவின் இலட்சியமாகும்.

காலத்தை அனுசரித்தல், கடமையைக் கவனமாகச் செய்தல், வாடிக்கையாளரின் நலத்தைக் கவனித்தல் என்பனவே கொழும்பு ஸ்ரூடியோவினர் கட்டிக் காத்துவரும் நோக்கமாகும்.


வி—ம்.


கைத்தொழில், கடற்றெழில் அமைச்சர்

**கௌரவ பிலிப் குணவர்த்தன அவர்கள்**

இன்று காலை 9-30 மணிக்கு எமது தொழிற்சாலைக்கு விஜயம் செய்கிருர்.

அனைவரையும் சமுகம் கொடுக்குமாறு அன்புடன் அழைக்கிறேம்.



வார்ப்புவேலைகளிலும், கடைச்சல் தொழிலிலும்

ஒப்புயர்வற்று முன்னணியில் திகழ்பவர்கள்

**சிலோன்**

**இன்டஸ்றியல் என்ஜினியரிங் வேக்ஸ்**

150, ஸ்ரான்லி விதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செழிப்புவாய்ந்த விவசாயப்பகுதியில்

எந்தவொரு நாடும் பொருளாதார சுபீட்சத்தை அடைய வேண்டுமானால் அங்கு கைத்தொழில்கள் பல வளர்ச்சியடையவேண்டும். இன்று உலகில் மிகச் செல்வச செழிப்புள்ள நாடுகளாக விளங்கும் அமெரிக்கா, ஐரோப்பாவாகிய நாடுகளை நாம் நோக்குவோமானால் அந்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்குக் காரணம் கைத்தொழிலாக்கமே என்பது வெளிப்படை. கனிப்பொருள் வளம் பெருகிக் காணப்படும் இந்த நாடுகளோடு நமது இச் சிறிய தீவை ஒப்பிடமுடியாது. இரண்டுக்கும் உள்ள இடைவெளி மலைக்கும் மடுவுக்கும் உள்ளதுபோலாகும். கனிப்பொருள் வளம் மிகக் குறைந்து காணப்படினும் கைத்தொழில் வளர்ச்சியில் இன்று முன்னணியில் நிற்கும் ஜப்பான்போன்ற ஆசிய நாடுகளைப் பார்த்தால் நமது இச் சிறிய தீவும் முயற்சி செய்யின் முன்னேறலாம் என்பது தெளிவாகிறது.

### கைத்தொழிற் பரம்பல்

கைத்தொழிலில் வளர்ச்சியடைந்துள்ள இந்த நாடுகளில் கைத்தொழில்கள் ஒரு மையமாக அமையாமல் இன்று பரவலாக அமைக்கப்பட்டிருக்கின்றன இவ்வாறு பரவலாக அமைந்துள்ளதனாலேயே அங்கு பொருட்களுக்குத் தட்டுப்பாடில்லை வேலையில்லாப் பிரச்னையில்லை. நிதிக்கும் கட்டுப்பாடில்லை. இத்தகைய பல அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதே கைத்தொழிலாக்கம்.

பணப் பிரச்னை, வேலையில்லாப் பிரச்னை, உற்பத்திப்பொருட்களின் பற்றாக் குறைப் பிரச்னை. இது போன்ற பல்வேறு பொருளாதாரப் பிரச்னைக்குள் அகப்பட்டு திணறிக்கொண்டிருக்கும் நம் சிறிய நாட்டிலும் அவைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் கைத்தொழில்ஆக்கத்திற்கு அடியெடுத்து வைத்துள்ளது யாவரும வரவேற்கத்தக்கதொரு நல்ல அம்சமாகும், நமது அரசாங்கத்தின் திட்டம் கைத்தொழிலைப் பிரதேசவாரியாக்குதலேயாகும் இச் சிறந்த திட்டத்தின் பலனாகவே இன்று நாட்டின் பல பகுதிகளிலும் கைத்தொழில் பேட்டைகளை அமைக்க அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

# முயற்சி எடுத்தால் இலங்கையும் யப்பானாகும்

### நாட்டின் கைத்தொழிற் பேட்டைகள்

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையின் பயனாகவே விவசாயம்தான் தஞ்சம் என்றிருந்த நம் யாழ்குடா மக்களுக்கு புத்துணர்ச்சியளிக்க இங்கும் ஒரு கைத்தொழில்பேட்டை அமைக்கப்படுகிறது. இக் கைத்தொழிற்பேட்டை செழிப்புவாய்ந்த விவசாயப்பகுதியான அச்சுவேலியில் அமையும். இந்த கைத்தொழிற்பேட்டை இலங்கையின் நாலாவது கைத்தொழில் பேட்டையாக அமைகிறது. முதலாவது கைத்தொழிற்பேட்டை நாட்டின் தலைநகரான கொழும்பில் எக்சல என்னும் இடத்தில் 70 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பில் அமைக்கப்படுகிறது. இரண்டாவது கைத்தொழிற்பேட்டை மலையகத்தலைநகரான கண்டியில் பல்லேகலை என்னுமிடத்தில் 75 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படுகிறது. நாட்டின் மூன்றாவது கைத்தொழிற்பேட்டை இத் தீவின் தெற்குப்பகுதியின் முக்கிய நகரமான காலியில் பூசா குதிரைப் பந்தயத்திடலில் அமைக்கப்படுகிறது. அடுத்து நான்காவது கைத்தொழிற்பேட்டையாக அமைகிறது நமது வடபகுதியின் தலைநகரான யாழ்ப்பாணத்திலுள்ள அச்சுவேலியில் அமைக்கப்படவிருக்கும் அதாவது இன்று அடிக்கல்நாட்டப்படும் கைத்தொழிற் பேட்டையாகும்.

### தொழிற்பேட்டையின் நோக்கம்

நாம் நமது அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை பற்றி விரிவாக ஆராயமுன்னர் கைத்தொழிற்பேட்டையென்றால் என்ன? அதன் நோக்கம் என்ன? அதனால் அது நிறுவப்படும் பிரதேசம் எத்தகைய நன்மைகளை அடைகிறது என்பன போன்றவைகளைத் தெரிந்து கொள்வது அவசியம். கைத்தொழிற்பேட்டை என்பது தனிப்பட்ட ஒரு தொழிலை மாத்திரம் கொண்டதொரு தொழிற்சாலையல்ல. தொழிற்பேட்டையென்னும் போது ஒரு பிரதேசத்தில் பொருத்தமானதொரு இடத்தைத் தெரிவு செய்து தொழிற்சாலைக் கட்டிடங்களையும் அத்துடன் இத் தொழிற்சாலைக்கு வேண்டிய மின்சார வசதி, போக்குவரத்து வசதி, வடிகால் வசதி, நீர் வசதி, சந்தை வசதி போன்ற பல பொது வசதிகளை ஏற்படுத்தி பல வகைத் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கைத்தொழிற்பேட்டை அமைக்கப்படும் பிரதேசத்தில் கைத்தொழிற் சமூகம் ஒன்றை உருவாக்குதலும் அப்பிரதேசத்தில் தொழில்களை விருத்தி செய்வதில் ஏற்படும் பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பதுமாகும்.

### நன்மைகள்

இவ்வாறு சிறந்த நோக்கங்களைக் கொண்டு நிறுவப்படும் கைத்தொழிற் பேட்டை வளர்ச்சியில இலங்கை கைத்தொழில் அபிவிருத்திக் கூட்டுஸ்தாபனமும், இலங்கைக் கைத்தொழில் கூட்டுத்தாபனமும் அக்கறையுடையவர்களாகவுள்ளன. நிறுவப்படும் கைத்தொழிற் பேட்டைகள் யாவும் கைத்தொழில் நிலையக் கூட்டுத்தாபனத்தின் கண்காணிப்பிலேயே உள்ளன. கைத்தொழிலாளர்களுக்கு இலவசமாகத் தொழிற் பயிற்சிகள், கைத்தொழில் சம்பந்தமான ஆலோசனைகள் ஆகியவற்றை அவர்களின் தொழில் அதிபர்களுக்குக் கீழ் வழங்குவதற்குத் தனித்தனியே பிரிவுகளை ஒழுங்கு செய்துள்ளது. தொழிற்சாலைகளை எவ்வாறு நிர்வகிப்பது, இத்தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும் பொருள்களைச் சந்தைப்படுத்தும் முறை, முதலீடுகள் எவ்விதம் அமையவேண்டும், தொழிலுக்குக் கடன் வசதிகள், தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் முறைகள் போன்ற இன்னோரன்ன பல விடயங்களில் இலவசமாக தொழிலாளர்களுக்கு ஆலோசனைகள் மேற்படி பிரிவுகளால் அளிக்கப்படும்.

விவசாயத்தின் மூலம் நாம் தொழில் வாய்ப்புகளை அதிகம் பெறவியலாது. கைத்தொழில் மூலமே தொழில வாய்ப்புகளை அதிகம் பெற முடியும், கைத்தொழிற்பேட்டைகள் கைத்தொழிலில் வேலைவாய்ப்பளிப்பதோடு நின்றுவிடுபவைகள் அல்ல அவை மறைமுக வேலைவாய்ப்புகளையும் அளிக்கின்றன. கைத்தொழில்பேட்டைகளால் இவ்வாறு மறைமுகமாகக் கிடைக்கும் வேலைவாய்ப்புகளே தொழிலால் கிடைப்பதிலும் அதிகம் எனலாம். மறைமுக வேலைகள் என்னும்பொழுது பேட்டையில் புதிதாக உருவாக்கப்பட்ட தொழில்களுக்கு மூலப்பொருள்களை வழங்குதல், உற்பத்திப் பொருள்களை பெற்று விற்பனை செய்தல், லொறி போன்ற வாகனங்களை வைத்து இத்தொழில் பேட்டை ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கு உதவுதல் போன்ற பல்வேறு வேலை வாய்ப்புகளைப் பெறுவதேயாகும். எனவே கைத்தொழிற்பேட்டைகள் பிரதேசரீதியாக நிறுவப்படுவதால் அப்பிரதேசத்தில் வேலையில்லாப்பிரச்னை தீரும் என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது.

### அச்சுவேலி தொழிற்பேட்டை


இத்தகைய சகல நன்மைகளையும் தரத்தக்க கைத்தொழிற்பேட்டை ஒன்றை நமது பிரதேசத்தில அரசாங்கம் நிறுவ முயற்சி எடுத்துள்ளது. நமது பிரதேச மக்களின் வரப்பிரசாதமேயாகும். அச்சுவேலியில் இலங்கையின் 4-வது தொழிற்பேட்டையாக அமையும் கைத்தொழிற்பேட்டைக்கு 65 ஏக்கர் முடிக்குரிய நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கைத் தொழிற்பேட்டையின் முதற் கட்டமே இன்று அமைக்கப்படுகிறது. இம் முதற் கட்டம் 35 தொழிற்சாலைகளைக் கொண்டுவிளங்கும். இதன் இரண்டாவது கட்டம் இம் முதற் கட்டம் பூர்த்தியானதும் நிறுவப்படும். இக்கைத் தொழிற்பேட்டையைநிறுவி முடிப்பதற்குத் தேவையான பணம் 75 லட்சம் ரூபாவெனக் கணிக்கப்பட்டுள்ளது. தற்போது அமைக்கப்படும் முதற்கட்டத்தில் 3 பிரிவுகள் அடங்கும். 3 வெவ்வேறு அளவுகளில் நிறுவப்படும் இக்கட்டிடங்களுக்கு தீப்பாதுகாப்பு, தெருக்கள், நீர், மின்சாரம், வடிகால் முதலிய வசதிகளும் தனித்தனியாக அமைத்துக் கொடுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இப்பிரிவுகளிலேயே நிர்வாகக் கட்டிடங்களும் பொதுசேவை வசதிகளும் அமைக்கப்படும். இத் தொழிற்பேட்டைக்குரிய கட்டிட அமைப்பை சமரசிங்க அசோசியேட்டட் அமைத்துள்ளது.

அச்சுவேலியில் அமையும் இக் கைத்தொழிற்பேட்டையினால் அச்சுவேலி மட்டு நன்மையடையும் என நாம் கருதிவிடக் கூடாது யாழ்ப்பாண குடாநாடுமுழுவதுமே இதனால் பெரும் நன்மையையடையும் இக்கைத்தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்கப்போது சேவை வசதிகள் அதாவது திருத்துதல், ஒட்டுதல், கடைதல், தொளையிடுதல் முதலிய சேவைகள் தொழிற்பேட்டைக்குமட்டுமன்றி குடா நாடு முழுவதற்குமே கிடை க்கும் இதைவிட இ தொழிற்பேட்டையி பயிற்செய்கைக்கென அமை க்கப்படும் பிரத்தியேக நில பரப்பில் புதிய பயிற்செ கைக் கருவிகளைக் கையாளு முறைகளில் விவசாயிக க்கு பற்சியளிக்கப்படும் இப்பயிற்சி அச்சுவேலிம களுக்குமட்டுமன்றி வட மாகணம் முழுவதிலு

## யாழ் பல்வேறு

உள்ள விவசாயிகளுக்கு நன்மையளிக்கும்.

மேலும் இக்கைத்தொழி பேட்டை இன்று கை தொழிலுக்கு கட்டிட நிறுவ மூலதன மின்றி திண்டாடும் கைத்தொழி அதிபர்களுக்குப்பெருவாய் பாகும். அவர்களுக்கு இ உடனடித் தொழிற்சா களைக் குறைந்த வாட யில் வழங்கிவிடும் மற் இப்பகுதியின் வேலைலல்ல பிரச்சினையும் ஓரளவுக் தீரும் சனத்தொகை கூ யாழ். ப்பகுதியில் உற் பொருள்களுக்குப் போ சந்தைவசதிகளும் கிடை




இன்று யாழப்பாணத்துக்கு விஜயம் செய்யும்
கைத்தொழில் கடற்றெழில்
## அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன
அவர்களை நாமும் வருகவருக என்று
வரவேற்கின்றேம்

# தேங்காயெண்ணை, புண்ணாக்கு
உற்பத்தியில் தன்னிகரற்றதும்
காலத்தில் கூடியதுமாகிய
# சி. எஸ். கே.
# கந்தையா செட்டியார்
# ஸ்தாபனம்

தரத்தில் உயர்ந்த தேங்காயெண்ணை புண்ணாக்கு வகைகளை
உற்பத்திசெய்து அமோக விற்பனைமூலம் மக்களின்
திருப்தியையும் ஆதரவையும்
பன்னெடுங்காலமாய்ப் பெற்று வருகிறது

த. பெ. இல: 8, பெரியகடை யாழ்ப்பாணம்.

கைத்தொழில்
வருக
தங்கள் வரவு
சிறந்த முறையி
டயர்களைப்
சிற
தொ
இன்
8/1 ஸ்ரான்லி வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யில் 4வது கைத்தொழில்பேட்டை


டுமன்றி கூடா வதற்குமே கிடை தவிட இத் பேட்டையில் கைக்கென அமை பிரத்தியேக நிலப் புதிய பயிற்செய் களைக் கையாளும் விவசாயிகளு செயளிக்கப்படும். அச்சுவேலிமக் டுமன்றி வட ம் முழுவதிலும் கும் மக்களும் பிறநாட்டில் தங்கி நில்லாது குறைந்த செலவில் நவீனவசதிகளு டன் கூடிய உற்பத்திப் பொருட்களைப் பெறுவார்கள். மற்றப்பிரதேசப் பொருள்களோடு இவை போட்டிபோடவும் கூடியதாகவும்மிருக்கும். எமது பகுதியின் கல்வித்தரம் உயர்வாகவுள்ளதால் ஆற்றல் மிக்க தொழிலாளர், பொறியியலாளர் ஆகியோரையும் தொழில்களாக விருக்கும் எமது கைத்தொருல்களை வளர்ச்சியுறச் செய்யும் இதனுல் இப்பகுதி மக்கள் வாழ்க்மைத்தரம் உயரும். வேலைவாய்ப்புப் பெறுவாக்கள் அதேவேளையில் சமுதாய பொருளாதார அரசியல் முன்னேற்றமும் ஏற்படும்.

—குணம்.

## யாழ்ப்பாண மக்களின் வேறு பிரச்னைகளுக்கும் தீர்வு

வசாயிகளுக்குமே ிச்கும். இக்கைத்தொழிற் இன்று கைத் கு கட்டிடம் லதன மின்றித் கைத்தொழில் க்குப்பெருவாய்ப் விரைவில் பெறக்கூடியதாகவிருக்கும்.

வடபகுதியில்காணப்படும் பழவகைகள், உப்புமுதலியவற்றை மூலப்பொருள்களாகக் கொண்டு இப்பேட்டையில் பல கைத்தொழில்களை நிறுவலாம். மற்றும் நெசவு,



அவர்களுக்கு இது தொழிற்சாலை றைந்த வாடகை கிவிடும் மற்றும் ின் வேலைலல்லாப் ும் ஓரளவுக்குத் த்தொகை கூடிய குதியில் உற்பத் ளுக்குப் போதிய திகளும் கிடைக் தோல், கடைதல், தும்புத் தொழில் போன்ற பல வகைத் தொழில்களை இங்கு கிடைக்கும் மூலப்பொருள்கள் கொண்டு ஆரம்பித்துச் சிறப்பாகச் செய்யலாம்.

சுருங்கக் கூறின் நமது பகுதியில் அயையும் இந்த அச்சுவேலித் தொழிற் பேட்டை குடிசைக்கைத்

(11ம் கலத் தொடர்ச்சி)

வளமான மூலப்பொருட்கள். இவற்றை நல்ல முறையில் பயன் படுத்த வேண்டும். முல்லைத்தீவு, வல்லிபுரக் கோவில், நாகர் கோவில் பகுதி மணல் கண்ணுடி செய்வதற்கு ஏற்றது என்றும் தொண்டமாஞறு, வலலாய், வல்லை, கரவெட்டிப் பகுதிகளில் பெற்ருேல் இருக்கிறதென்றும் சமீபத்தியபூகற்பவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள். இவற்றின் உண்மைகளை ஆராய்ந்து அதற்கேற்ப அரசாங்கம் செயற்பட முன்வரவேண்டும்.

''லக்சல'' போன்ற உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும்வியாபார நிலையங்கள் ஊர்கள் தோறும் நிறுவப்பட வேண்டும். மக்களிடையே நாட்டுப்பற்றையும் தேசிய உணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும், மாருக வகுப்புவாத இன, மொழி உணர்வுகளை ஏற்படுத்தி அமைதிக்கும் மனிதாபிமானத்திற்கும் பங்கம் ஏற்படுத்தக்கூடாது. ஒவ்வொரு இலங்கையனும், ஈழப்பெண்மணியும் இலங்கையில் தயாராகும் உடைகளை அணிந்து இலங்கைக் காரில்-இலங்கை விமானத்தில் பிரயாணம் செய்ய வேண்டும். இத்தகைய காலம் வந்தாற்ருன் நாம் முற்ருகபொருளாதார சுதந்திரம் அடைந்தவர்களாவோம். இல்லாவிடில் நாம் சுதந்திர இலங்கையில் வாழு

(VIIIம் பக்கம் பார்க்க)

### தேவிகா...

(vii-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஸ்தாபனத்தில் ஆரம்பத்திலிருந்து சாதாரண ஊழியராகச் சேர்ந்த திரு. பத்மநாதன் இன்று உயர்ந்தசம்பளத்தில் பிறின்டிங் மாஸ்டராகக்கடமையாத்றுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தங்களது 7 பிள்ளைகளில் ஆருவது பிள்ளையின் பெயர் தேவிகா என்பதால் இத்தொழிலகத்துக்கு தேவிகா ஆர்ட் எண்டர் பிரைசெஸ்' என்று பெயரிட்டதாக ஸ்தாபன உரிமையாளர் திருமதி கந்தையா கடைசியாகச் சொன்னுர்.

### வசந்தா...

(II-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தை ஆரம்பித்த திருமதி அருளுசலம் கூறினுர். இவர்களுக்குத் தேவையான வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்தால் வருங்காலத்தில் யாவரும் அதிசயிக்கத் தக்கவகையில் இவர்கள் வேலைகள் அமையும் என்பதுநிச்சயம். பல நங்கையருக்கு வேலைவாய்ப்பளிக்கும் இத்தகைய தனியார் ஸ்தாபனங்கள் தங்களுக்கு வேண்டிய உபகரணங்களைப் பெற அரசாங்கம் உதவ வேண்டும்.


ந்தொழில் அமைச்சர் அவர்களே!

வருக! வருக!!

ங்கள் வரவு நல்வரவாகட்டும்!

ந்த முறையில் உத்தரவாதத்துடன் பர்களைப் புதுப்பிப்பதற்கு

சிறந்த இடம்

நொர்தேர்ன் இன்டஸ்றீஸ்

ரான்லி வீதி — யாழ்ப்பாணம்

போன்: 7158


# நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த சிலயோசனைகள்

இலங்கை 1948ம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி வரைக்கும் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரிட்டிஷ்காரர் என்று அன்னியர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. போர்த்துக்கீசர் 1505ம் ஆண்டு வந்து பெரிய பீரங்கிக்ளையும் குண்டுகளையும் வெடித்துத் தாங்கள் பலம் வாய்ந்தவர்கள் என்று இலங்கை மக்களை நம்ப வைத்தனர். அப்போதிருந்த உள்ளூர் அரசர்களுக்கிடையில் குழப்பங்களை ஏற்படுத்தினர். இறுதியில் வியாபார நோக்கத்திற்காக வந்தவர்களெல்லாம் எமது நாட்டை அடிமைப்படுத்தி ஆட்சி செய்தனர். தமது பாதுகாப்பிற்காகக் கோட்டைகளையும் தளங்களையும் அமைத்துச் சென்றனரே தவிர இலங்கையின் பொருளாதார வளத்திற்காக எதுவும் செய்துவிட்டுப் போகவில்லை.

ஆங்கிலேயர்கள் தேயிலையை எமக்கு அறிமுகம் செய்து வைத்து அதனை மலைநாட்டில் பயிரிட வைத்தனர். பின்னர் அதன் பலனைப் பிறநாடுகளுக்கு அனுப்பி வியாபாரம் செய்தனர். இந்தியாவிலிருந்து கூலிகளாக இறக்குமதி செய்யப்பட்ட தோட்டத் தொழிலாளர்களும் இலங்கையின் சிங்கள, தமிழ்த் தொழிலாளர்களும் அன்னிய முதலாளிகளான வெள்ளைக்காரர்களின் அடிமைகளாக வேலை செய்தார்கள். அவர்கள் சிந்திய வியர்வை வெள்ளிப் பணமாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகியது. தமது வியாபாரப் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏதுவாகவே புகையிரதப் பாதைகளையும் ஆங்கிலேயர்கள் போட்டுக் கொடுத்தார்கள். தமது கச்சேரிகளில் எழுதுவிஞைர்களாக வேலை செய்வதற்கென்றே கல்விமுறையைத்தயாரித்தார்கள். இவ்வாறு இழைத்துவிட்ட துரோகங்கள் அளப்பரியன. இத்தகைய சாரணங்களாற்ருன் சுதந்திரமடைந்து இருபது ஆண்டுகள் சமபித்தும் எமது சுயதேவைகளை எம்மால் பூர்த்தி செய்து கொள்வ முடியவில்லை.

ஆனுல் சுதந்திர இலங்கை இன்று தனது அடிமைக்காலத்தைவிட அதிகளவு முன்னேறியிருக்கிறது. கைத்தொழில் விவசாயத்துறையில் அன்னிய நாடுகளின் பொருளாதார உபகரண உதவிகளைப் பெற்றேனும் இலங்கைபடிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகிறது.

அன்றுஆங்கிலேயர்கள்இங்கிருந்து தேயிலையை ஏற்றுமதிசெய்துவிட்டுத் தமது நாட்டிருந்து உயர்ரக துணிவகைகள், உணவுப் பண்டங்கள் மாவகை, அலங்காரப் பொருட்கள் என்பனவற்றை இறக்குமதிசெய்து வியாபாரம் செய்தனர். இதனுல் அன்று ஈழத்தில் இன்றிருப்பது போல் மட்பாண்டத் தொழிற்சாலைகளோ, செங்கல் ஒட்டுத் தொழிற்சாலைகளோ, உப்பளங்கள் சிமெந்துத் தொழிற்சாலைகளோ, குடிசைக்கைத்தொழில் நிலையங்களோ இருக்கவில்லை. இந்நிலைமைக்கு வர்த்தகர் வெ[illegible]

வுமில்லை. சுதந்திரமடைந்த பின்னரே இலங்கைவாழ் மக்களிடையே இது எங்கள் நாடு, நாங்கள் எவருக்கும் அடிமைகளல்லர், எமது சுயதேவைகளை நாமே பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி தோன்றியது. மக்களால் அமைக்கப்பட்ட அரசாங்கங்களும் உடனடியாகச் செயல்பட ஆரம்பித்துக் கைத்தொழில் கமத்தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களைத்தீட்டிவந்தன. பலவற்றை அமுலுக்கும் கொண்டுவந்துள்ளன.

இன்று உலகில் வல்லரசுகள் எனக் கணிக்கப்படும் ரஷ்யா, அமெரிக்கா, சீனு போன்ற நாடுகள் வேறு நாடுகளுக்கும் தமது ஆதரவாளர்களுக்கும் உழவு இயந்திரங்கள், தானிய வகைகள், விஞ்ஞான ஆய்வுக்கருவிகள் என்பனவற்றை அன்பளிப்புச்செய்யும் அளவிற்கும், அணுகுண்டு, ராக்கெட்டுகளைக்கண்டு பிடிக்கும் அளவிற்கும் பொருளாதாரத்துறையில் முன்னேறியுள்ளன. இவற்ருேடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இலங்

கு. பேரம்பலம்

கையின் முன்னேற்றம் மலைக்கும் மடுவுக்குமிடையே உள்ளதுபோலாகும்.

இருப்பினும் பஸ்களையும், பெற்ருேல் நிலையங்களையும் தேசியமயமாக்கியது போன்று அந்நியத்தேயிலைத் தோட்டங்களையும் தேசியமயமாக்கி அவற்றை ஈழத்து மக்களின் பொதுச் சொத்தாக்கிவிட்டால்அவற்றினின்றும் கிடைக்கக்கூடிய வருமானம் முழுவதும் இலங்கை அரசாங்கத்திற்கே சொந்தமாகிறது. ஆனுல் தற்போதுள்ளநிலையில் மேற்படி தோட்ட வருமானத்தின் மிகச்சிறிய பங்குதான் வரிப்பணமாக அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது எனவேதான் எமது பொருளாதாரம் தனித்தன்மை பெறுவதற்கு அந்நியக் கம்பெனிகள், தோட்டங்கள் யாவும் தேசியமயமாக்கப்படவேண்டும் சுதந்திரம் கிடைத்த பின்னரும் அடிமைகளாக வாழ முயற்சிப்பது அறிவீனமாகும்

பொருளாதார முன்னேற்றம் காணும் வழிவகைகளில் இன, மத, மொழி பாராட்டக்கூடாது. உதாரணமாகத் தமிழர்களுடைய பிரதேசத்திலிருக்கிறது என்பதற்காக காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை-துறைமுகத்தை அபிவிருத்தி செய்யாமலிருப்பதோ அல்லது சிங்களவர்களுடைய பிரதேசத்திலிருக்கிறது என்பதற்காகக் களனியிலுள்ள செங்கல் ஒட்டுத் தொழிற்சாலையை விருத்தி செய்யாமல் இருப்பதோ அறிவீனமாகும். இத்தகைய கொள்கை உண்மையான பொருளாதார தத்துவத்துக்கே முரண்பட்டதாகும். குறைந்த செலவில் அதிக உற்பத்தி கூடுதலான இலாபம் காணவேண்டும். அப்போதுதான் பொருளாதாரம் உண்மையில் உயரும். காங்கேசன் துறையிலிருந்து புகையிரதமூலம் கொழும்புக்கு சிமெந்தைக் கடத்துவதைவிட கப்பலின்மூலம் கடத்துவது இலாபகரமானது என்ருல் அதற்காக காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதுதானே முறை? இதை மனதிற் கொண்டு இன்னைய அரசாங்கம் செயற்பட முன்வந்திருப்பதினுல் உண்மையிலேயே பல கைத்தொழில்கள் விருத்தியடைய முடியும்.

இன்று அரிசி தருகிற ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு சீனு இலங்கை மீது அதிகாரம் செலுத்த முயல்கிறது. எமது நாட்டிலேயே எமக்குத் தேவையான அரிசி விளைச்சல் இருநதால் நாம் எதற்காகப் பிறநாடுகளிடம் கையேந்தி நிற்கவேண்டும்? 'ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்...'' என்று சங்க இலக்கியம் கூறுகிறது. எனவே முற்காலத்தில் ஈழத்திலிருந்து உணவு ஏற்றுமதியாகியுள்ளது புலனுகிறது. இலங்கையின் வடபகுதியில் நன்ருக நெல் விளையும். ஊக்கமுள்ள உழைப்பாளிகள் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் தீரர்கள்' இருக்கத்தான் செய்கிருர்கள். ஆனுல் வற்ருத நதியில்லை, வளமான ஆறில்லை. பாலைவனமாகக் காட்சி தருகிறது பாழாய்ப்போன பிரதேசம். தென்னிலங்கையில் தேவையற்ற பிரதேசங்களில் ஓடிக்கொண்டிருக்கும் ஈழமாதாவின் வற்ருத செல்வியாம் மகாவலிகங்கையைவடக்கே திருப்பிவிட்டால் வவனியாவிலும் முல்லைத்தீவிலும்வளமான நெல் வயல்களை உருவாக்க முடியும்,

இலங்கையில் அணுக்குண்டு செய்யவேண்டாம். அடுப்புவகை செய்தாலே போதுமானது. காரீயம், இலுமனைட் (புல்மோட்டை) சீனுக்களி, சுண்ணக்கல், கறியுப்பு (சோடியம் குளோரைட்டு)என்பன இலங்கையின்

(7-ம் கலம் பார்க்க)


வடமாகாணத்தில் தயாரிக்கப்படும்

சிறந்த வாண, வெடிகள்

புரு மார்க் வாண வெடிகளே!

| | | |
|---|---|---|
| ★ கேளுங்கள்! | --- | வாணங்கள் |
| ★ வாங்குங்கள்! | --- | வெடிகள் |
| ★ கொளுத்துங்கள்! | — | விறிசுகள் |
| ★ மகிழுங்கள்! | — | அவுட்டுகள் |

ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

உரிமையாளர்: P. மணியம்

புரு மார்க் வாண, வெடி தொழிற்சாலை,

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்

# கைத்தொழில், கடற்றொழில் அமைச்சர்
# கௌரவ பிலிப் குணவர்த்தன

அவர்களை

## வருக! வருக!! என்று வரவேற்கின்றோம்



DAE

கௌரவ அமைச்சர் அவர்கள் எமது தொழிற்சாலைக்கு நாளை 20-ம் திகதி மாலை 5 மணிக்கு விஜயம் செய்கிறார். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## பட்டுப்பிடவைகளின் (SCREEN) தயாரிப்பாளர்கள் சகலவிதமான துணிகளையும் அச்சிடுபவர்கள்

# தேவிகா
# ஆர்ட் என்டர்பிரைசெஸ்

6, கைலாயபிள்ளையார் கோவில் வீதி, : நல்லூர், : யாழ்ப்பாணம்.


போன் : 218

கிளை: 24, பிளவர் வீதி, கொழும்பு 7. : போன் : 24073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவிகா தொழிலகம் வளர்ந்த கதை

'திரு'



ஆறு வருடங்களுக்கு முன்னர் சிறிய வீடொன்றில் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்துள் தனக்கென ஒரு இரண்டுமாடிககட்டடத்தை அமைத்து, வளர்ச்சியடைந்த ஒரு கலைத்தொழிலகம் வடக்கே உண்டென்றுல் அது நல்லூர் தேவிகா கலைத்தொழிலகம்தான்.

தேவிகா கலைத்தொழிலகம் என்றுல் தெரியாதவர்கள் சிலவேளை இருக்கலாம். ஆனல் திருமதி கந்தையாவின் தேவிகா ஆர்ட்என்டர் பிறைசெஸ் என்றுல் வடக்கில் என்ன தெற்கில் கூட தெரியாதவர்கள் இருக்க முடியாது.

இதற்கு முழுக் காரணம் அந்தக்குடும்பமே ஒரு கலை நுணுக்கம் கொண்ட குடும்பமாக இருப்பதுதான்.

திருமதி கந்தையா இத்தொழிலகத்தின் அதிபராகவிருக்கிறுர். இவரது கணவரான திரு. எம். எஸ். கந்தையா கொழும்பு நுண்கலைக்கல்லூரியில் 'ஆர்ட் டெக்ஸ்டைல்' பாடபோதஞசிரியராகக் கடமையாற்றுகின்றுர். இவர்களதுமகனுன செல்வேந்திரன் ஜெர்மன், சுவிற்சர்லாந்து மான்செஸ்ரர் ஆகிய இடங்கள் சென்று இத்துறையில் விசேஷ பயிற்சி பெற்றபின்னர் திரும்பிவந்து கடமையாற்றுகின்றுர். இதுவே போதாதா இந்த ஸ்தாபனம் குறுகியகாலத்தில் வளர்ச்சியடைவதற்கு!

1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்த ஸ்தாபனம் யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத் தெருவில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இரண்டு மேசையில் மட்டுமே நடைபெற்ற வேலையில் மூன்று தொழிலாளர்கள் மட்டுமே வேலைசெய்தனர். ஆரம்பத்தில் 'கோர்ட்டா'வும் குறைவாகவே கிடைத்ததால் உற்பத்தியும் விற்பனையும் அபிவிருத்தியடையவில்லை. இருந்தாலும் ஆர்வம், விடா முயற்சி உற்சாகம் குன்றவில்லை.

1967-ம் ஆண்டு நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் வீதி 6-ம் இலக்க வளவில் இதற்கென சுமார் 4 லட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று நிறுவப்பட்டது. இன்று ஆண்களும் பெண்களுமாக 60பேர் வேலைசெய்கின்றுர்கள்.

சாயம்தோய்த்தல், கைத்தறிநெசவு, கைமூலம் ''பினிஷிங்'' துணிகளுக்கு அச்சிடுவது ஆகியவேலைகள் இங்கு நடைபெறுகின்றன. ஆரம்பம் முதல் இன்றுவரை ஸ்தாபன மனேஜராக இருப்பவர் திரு. என். ஆர். சோமர்.

நெசவு செய்யும் பெண்களுக்கு யார் ஒன்றுக்கு 75சதவீதம் வழங்கப்படுகின்றது. அச்சடிக்கும் ஆண்களுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாவிலிருந்து மாதம் 200 ரூபாவரையிலும் வழங்கப்படுகின்றது. இதுதவிர இரண்டு சித்திரம்வரையும் இருவரும் தலா 200-150 ரூபா சம்பளத்துக்கு வேலை செய்கின்றுர்கள்.


சேலைகள், விரிப்புகள், கதவு ஜன்னல், வேலைகள் ஆகியவைகளுக்கு விசேஷமாக இங்கு அச்சடிக்கப்படுகின்றது. இப்போதுபோதிய கோட்டா கிடைப்பதால் உற்பத்தியும், விற்பனையும் கூட அதிகரித்திருக்கின்றதாம்.

மாதம் ஒன்றிற்கு சுமார் பத்தாயிரம் ரூபாவரையில் விற்பனையாகும் துணிகள் இங்கு உற்பத்திசெய்யப்படுகின்றன. இதில் சுமார் ஐயாயிரம் ரூபா வரையில் ஊழியர்களுக்கு சம்பளமாக மட்டும் வழங்கப்படுகின்றது.

கொழும்பில் சி. டபிள்யு. ஈ. ஸ்தாபனம், லக்சல ஆகியனவும், யாழ்ப்பாணத்தில் ஆத்மபாய், முனீர்ஸ், ஜமீலா. ரி. குமாரசாமி, அஜந்தாஸ், ஞானபண்டிதன், டயறம்ஸ், லேடன் ஆகிய பிடவை ஸ்தாபனங்கள் தேவிகா ஆர்ட் என்டர் பிறைசெஸ் உற்பத்தித் துணிகளின் விற்பனையாளர்களாகவிருக்கிறுர்கள்

வெகுவிரைவில் யாழ்ப்பாணத்தில் ''புறெசெஸிங் ஹவுஸ்'' ஒன்றையும் இவர்கள் நிர்மாணிக்கவிருக்கிருர்கள். இங்கு 'பினிஷிங்' செய்யப்படும். வடக்கில் எங்குமே 'பினிஷிங்' மெசின் நிறுவப்படவில்லை. கூடியகெதியில் இதனை நிறுவுவதன் மூலம் வடக்கிலுள்ள சகல நெசவாலைகளினதும் 'பினிஷிங் வேலைகளைத் தங்களால் செய்து கொடுக்க முடியும் என்று மனேஜர் மகிழ்ச்சியுடன் சொன்னுர்.

V-ம் பக்கம் பார்க்க



## யாழ்நகரில் ஒரு கண்ணுடித்தொழிற்சாலை

யாழ்ப்பாணத்திலுள்ள படித்த வாலிபர்களுக்கு வேலை வழங்கவேண்டும். அதே வேளையில் யாழ்ப்பாண நகரில் ஒரு தொழிற்சாலையும் நிறுவவேண்டும். இந்த எண்ணத்தில் எழுந்த திட்டம் தான் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இருக்கும் 'பெனின்சுலா' கிளாஸ் வேக்ஸ் இன்டஸ்றீஸ்.

சின்னத்துரை ஏஜென்ஸீஸ் அன்ட் டிஸ்றிபியூட்டர்ஸ் ஸ்தாபனம் நிறுவப்பட்டு ஒரு வருடம்கூட முடிவதற்குள் அவர்களால் நிறுவப்பட்ட இன்டஸ்றீஸ்தான் இந்தக் கண்ணுடித் தொழிற்சாலை.

இத்தொழிற்சாலையில் இப்போது 60 படித்த வாலிபர்கள் பயிற்சி பெறுகின்றுர்கள். இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதம்தான் ஆகின்றது. அதற்கிடையிலேயே இரண்டாவது திட்டம் ஒன்றையும் இவர்கள் தயாரித்துள்ளார்கள்.

இரண்டாவது திட்டம் இன்னும் 6 மாத காலத்தில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு மேலதிக கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு புதிய மெஷின்கள் பொருத்தப்படும். இரண்டாவது திட்டம் ஆரம்பிக்கப்படும் போது இங்கு மேலும் 200 படித்த வாலிபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கில் இரண்டாவதாக அமைக்கப்பட்ட கண்ணுடித் தொழிற்சாலை இதுதான். யாழ் நகரில் முதலாவதாக அமைக்கப்பட்டதென்ற பெயர்பெற்ற இத்தொழிற்சாலை உற்பத்தித் துறையிலும் முன்னணியில் திகழ்கின்றது.

இத்தொழிற்சாலையை ஒரு முறை சுற்றிப் பார்த்த போது வாலிபர்கள் அங்கு மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் வேலை செய்வதைக் காணக்கூடியதாக விருந்தது.

இந்தத் தொழிற்சாலையில் மற்றெரு சிறப்பு என்னவென்றுல் இங்கு பாவிக்கப்பட்டுவரும் சகல மெஷின் வகைகளும் யாழ்ப்பாணத்திலேயே உருவாக்கப்பட்டது என்பதுதான்.

இப்போது இத்தொழிற்சாலையில் 3 பிரிவு நேர வேலையாக இரவும் பகலும் வேலை நடைபெறுகின்றது. காலகதியில் உற்பத்தித்துறையில் மட்டுமன்றி, படித்த வாலிபர்கள் பலருக்கு வேலை வழங்குவதிலும் இத்தொழிற்சாலை முதன்மை அடையும் என்று எதிர்பார்க்கிறுர்கள் பொது மக்கள்.

—திரு.


வட இலங்கையின் முன்னணி ஸ்தாபனம்!

★ சகல ரக சிமிலிகள்

★ எல்லா அளவிலான கிளாஸ்கள்

மற்றும்

சகலவிதமான கண்ணுடிப் பொருட்களையும்

உற்பத்தி செய்பவர்கள்

பெனின்சுலா
கிளாஸ் வேக்ஸ்
அன்ட் இன்டஸ்றீஸ்

ஏஜன்ஸ் அன்ட் செக்ரட்டர்ஸ்:

சின்னத்துரை ஏஜென்ஸீஸ்
அன் டிஸ்றிபியூட்டர்ஸ்
சின்னத்துரை பில்டிங்

: : யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீர்"

(வழககறிஞர்-அளவையூர் மு.திருநாவுக்கரசு)

புலவர்களுக்குக் குறைவின்றி நிறையப் பெற்றிருந்த திருநாடு நம்தமிழ்நாடு. கவிபாடி காலம் கடத்திய கும்பலையும், புகழ் பாடிப் பணம் பல திரட்டிய புலவர்களேயும். தூது சென்று மன்னவரையும், அவர்தம் மனேயாளேயும் துதிபாடிக் காலம் கடத்திய கவிஞர்களேயும், வசைபாடி வளம் பெருக்கி வாழ்ந்து விட்ட கவிவாணர்களேயும், ஏராளமாகக் கண்டு களித்தது நம் தமிழ்ச் சமுதாயம்; இப்படியாகப் புலவன் என்பவன் பொய் யு [illegible] புலவன் [illegible] பொய்ய பறந்தது. என்னும் மளவிற்கு வாழ்ந்துவிட்ட கவிஞர் பரம்பரையில், உண்மைக்கும். உயர்வுக்கும் நெறி தவருப் பெருவாழ்விற்கும், நிலேயுணர்ந்து கவி தொகுத்தபுலவர் பெருமக்கள் மிக்கசிலரையே தமிழ் நூல்கள் காட்டி நிற்கின்றன. இப்படியாக உயர்வுற்ற புலவர்களில் தலையாய பெரும் புலவர் நம்தெய்வத் திருநெறிதன்னே வகுத்தளித்த வள்ளுவனுர் முதல்வர் என்ருல், தமிழர் தம் இழிவு நிலே கண்டு, மனம் மிக நொந்து வெந்து விட்ட பெரு உணர்வால், வீரமுழக்க மிட்ட பெரும் புலவர் நம்புரட்சிக்கவிஞர் பாரதியெனலாம். முன்னேயபெரும் புலவர் உலகுக்கு நீதி நெறி வகுத்த நேர்மையாளன், பின்னேய பெரும் புலவன் பாரதியோ, உலகுக்காக வாழாமல், உலக நீதிக்காக அதிக தூரம் வாதிடாமல். வாழ்ந்திருந்த பெரு இனமாம் தமிழினம், வளம்பல பெருக்கி வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த திருக்கூட்டம், ஒய்துவிட்ட இழிநிலேகண்டு பரிதவித்தார் நொந்து விட்ட தமிழினத்தின் நோக்காட்டைப் போக்கிடவும், சோர்ந்து விட்ட பெரு இளத்தின் சோகத்தைப் போக்கிடவும், உணர்ச்சி மிகு கவிகளால், தமிழினத்தின் மிளிர்ச்சியை உள்ளக்கிளர்ச்சியை, உணர்ச்சி வேகத்தை சமுதாயப் புரட்சியை சமதர்மப்'பெருநோக்கை இவற்றையெல்லாம் உள்ளடக்கிய புதியதோர் சகாப்பத்தை உருவாக்கிய உத்தமனுவார்.

இன்று நேற்றல்ல, இற்றைக்குஇரண்டாயிரமாண்டு கட்டு முன்பே வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தான் தமிழன் இது குறள் கூறு முண்மை வையகம் முழுமையும் ஏற்க வல்ல ஒரு பொது விதியை வாழ்ந்து காட்டி வகுத்து வைத்த தமிழன், இனிமேல் வாழாது மடிந்திடுதல் தான் முறையோ? என்பதே பாரதியின் கவிதைகளின் உளத்துடிப்பு மட்டுமன்றி உயிர்நாடியும் கூட வள்ளுவன் தன்னே உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டைக் கண்டான் பாரதி. அவனி தனில் அன்ருெரு நாள் அவனடைந்த ஏற்றத்தை எண்ணினுன் பாரதி பண்டைய பழமைதனே நினேவு படுத்தும் பாரதி வேதம் நிறைந்த தமிழ்நாடு; உயர் வீரம் செறிந்த தமிழ்நாடு, பல்வகையாகிய சாத்திரத்தின் மணம் பாரெங்கும் வீசிய தமிழ்நாடு என்று பாடினுன். இப்படியாக புகழ்மண்டிக் கிடந்த தமிழ் நாட்டைக் கண்ணுற்ருன் பாரதி. காதல்புரியும் அரம்பையரையும், வீரம்நிறைந்த வாலிபரையும் காவிரி, வைகை ஆதியாம் கரை புரண்டோடிய நதிகளேயும் கண்டான். தமிழர்தம் பெருமையும் தமில்ப்பெருமக்களும், சிங்களம், புட்பகம், சாவகமாகிய தீவு பலவினும் சென்று குடியேறக்கண்டான். அது மட்டுமா? அங்கெல்லாம் தமிழர்கள் தங்கள் புலிக் கொடியும், மீன்கொடியும் சால்புறக்கண்டனர் என்பதையும் வலியுறுத்திக் கவி வகுத்தான்.

அன்ருெருநாள் இப்படியாக உலகுவியக்க வாழ்ந்தான் தமிழன், அவன் நீதியும் நெறிமுறையும், அரசும் ஆட்சிமுறையும், ஜனநாயகப் பெரும்பண்பும், பண்பாடும், செழித்தோங்கக்கண்டான். அவனது நேர்மையின் கூர்மையும், அறிவும், ஆற்றலும், அறிவுலகத்திற்கு அவனே வழிகாட்டியாக ஆக்கியதை உணர்ந்தான் பாரதி.

ஆனுல் இப்படியாகப் பழமை பாடிக் காலத்தை ஓட்டினுரல்ல பாரதி இது தான் நம்தமிழ் புலவர்கட்கும் நம் கவிபாரதிக்குமுள்ள வேற்றுமை. பழமையை நினேவு படுத்தினுன் பழமையைப் புகழவல்ல, பாவரங்கில் பாவிசைத்து பாடவல்ல, பொன்னும் பொருளும் சேர்க்கவல்ல, பூரிப்பு அடையவல்ல பழமையினே நாம் கண்ட பெருமியினே, பெற்றி தன்னே, இனியும் எய்திட வேண்டுமென்பதே அவனது உள்ளக் குமுறல் மட்டுமன்றி உணர்ச்சிவேகமும்கூட, வீட்டுக்குள்ளே தாள்ப்பாளிட்டு முடங்கிக் கிடக்கும் பெண்களேப்பார்த்திருக்க முடியவில்லே அந்தப் பாவலனுக்கு

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கிஇவ்வையம் தளேக்குமாம்''

என்று மாதரிசிகளே ஊக்குவித்தான் பாரதி. வீட்டுக்குள்ளே பெண்ணேப் பூட்டி வைப்போமென்ற வீணர்களே விரட்டியடித் தான் பாரதி-ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார் என்று கூறி:-

''திகல வானுதலார் தங்கள் பாரத,' தேச மோங்க உழைத்திட வேண்டுமாம் விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை, வீரப்பெண்கள்விரைவில்லொழிப்பாரம் மூத்த பொய்கள் யாவும மழிப்பாரம் மூடககட்டுககள் யாவும் தகர்பாராம்'-என்று முழங்கினுன்.

இன்று போலன்றும் தமிழர்கள் எடுப்பார் கைப் பிள்ளேகளாக, கோல் கொண்டு வழிஅறியும் குருடரைப்போல் திசை தடுமாறி வாழ வில்லே என்பதை உணர்ந்தான்:

''தமிழன் என்ருேர் இன முண்டு தனியே அதற்கொரு குணமுண்டு''

என்ருனே நம் பாரதி எது எமது தனிககுணம், கைகட்டி வாழ்வதா! அல்லது பாமாராய், விலங்குதகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல நம்பான்மை கெடடு வாழ்வதா, இதில் எதுஎமது தனிப்பண்பு என்று ஆராய வேண்டுமளவிற்கு சிதைந்து விடடது நம் மினம்.

''தேமரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகைசெய்தல் வேண்டும்''

என்ருனே நம் பாரதி, இன்று உள்வீட்டிலேயே தமிழ் பரவவில்லேயே ஆங்கில மோகமும், அன்னியன் அடிபணியும் அவாவும் இந்த அவலநிலேகண்டு மனம்வேகினுன் பாரதி.

''ஆயிரமுண்டிங்கு சாதி என்பதை எண்ணி எண்ணி வேதனே கொண்டான். கொஞ்சமோ பிரிவினேகள் ஒரு கோடியென்ருல் அது பெரிதாமோ? என்று கேட்டு கேட்டு பொங்கி எழுந்தான். மந்திரத்தில், யந்திரத்தில் வீண்தந்திரத்தில் மதிமயங்கி அந்தரிக்கும் தமிழர்களேக் கண்ணுற்ருன். நெஞ்சு பொறுக்குதில்லேயே இந்த நிலே கெட்ட மனிதரை நினேத்துவிட்டால், என்று தன் நெஞ்சக்குமுறலே கவிதையாகவே பாடிவிட்டான் அப்பாவலன், எம்மவர் நிலேயை இப்படியாக கண்ணுற்ருன் பாரதி.

அஞ்சி அஞ்சி சாவார்-இவர்
அஞ்சாத பொருளில்லே அவனியிலே
வஞ்சனேப் பேய்களென் பார்-இந்த
மரத்திலென்பார் அந்தக் குளத்திலென்பார்
துஞ்சு முகட்டிலென்பார் மிகத்துயர் படுவார்
எண்ணிப் பயப்படுவார்.

கண்டகண்ட தெய்வங் கலேக் கட்டி அணக்கும் நம் தமிழர்களேயும் பாரதியால் பார்த்திருக்க முடியவில்லே. ஆயிரம் தெய்வங்களுண்டென்று எண்ணி அலேயும் அறிவிலிகாள் என்று விழிக்கும் பாரதி! மாடனே, வேடனே, காடனேப் போற்றி மயங்குதல்தான் மதியாகிடுமோ? சுத்த அறிவே சிவனென்று போற்றும் சுருதிகள் அறியீரோ? இனியும் பித்த மதங்கள் பலதில் தடுமாறி பெருமையளிப்பீரோ என்று கேட்டு வைக்கின்ருன்.

வேலேயில்லேயென்று வீண் வம்பளக்கும் வீணர்களேப் பார்த்திருக்க முடியவில்லேப் பாரதிக்கு.

இடும்பைக் காய்ச்சி உடுக்கியந்திரங்கள் செய்திடுவீர்
கரும்பைச்சாறு பிழிந்திடுவீர்
கடலில் மூல்கி முத்தெடுப்பீர்
அரும்பு வர்வை உதிர்த்துப்புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீர்

என்று கூறிய பாரதி, மண்ணிற் குடங்களும், மரத்தில் மனேகளும், உழுது பல்வகை தானியம் காய்கறி, எண்ணேயும், பாலும் கொணர்ந்திடுவீர் என்று ஆக்கமான ஊக்கமூட்டத் தவறினுனில்லே.

புத்தம் புதிய கலேகள் பற்பல, பஞ்சபூதத்தின் நுட்பங்கள் மூறுமிவை மெத்த மேற்கே வளருகின்றனவே இந்த மேன்மைக் கலேகள் தமிழினிலில்லே, என்று கேட்டதும் பாரதி துடித்தான். சொல்லும் திறமை தமிழினுக்கில்லே சொல்லவும் கூடுவதில்லே. மெல்லத் தமிழ் இனிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும், என்று கேட்டதும் பாரதியின் உள்ளம் குமுறியது. இப்படி உரைத்தான் யாரோ ஒரு பேதை என்று சாடினுன் பாவரசன் பாரதி. அத்தோடு நின்ருனில்லே எம்போன்ற இளேஞரைப் பார்த்து 'இந்த வசை எமக்கெய்திடலாமோ? சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலேச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று அறிவுறுத்தினுன்.

பலமை பாடுவதே புலமை புகழ் பாடுவதே வழமை வசை பாடுவதே திறமை மற்றும் மன்னரையும் மனேயாளேயும் மணம்மகிழ வைப்பதே அவர் கடமை. சமுதாயத்தை தட்டி எழுப்புவதும் சீர்கெட்டு சீரழிந்த தமிழினத்தை கவிதை கொண்டு சாடி, மடமையின் பிடியிலிருந்தும் அவர்களே விடுவிப்பதே முறமையும், கடமையும் என்று புலவர்கட்கே புதியாதோர் பாடம் வகுத்தளித்தான் பாவலன் பாரதி.

எனவே பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொல்ல வாழ்வதா அல்லவா? என்று நாமே நமக்குள் முடிவுகட்டவேண்டிய நேரமும் காலமும் வந்துவிட்டது.

சாதி பாவத்தை சாகடிப்போம். மூடநம்பிக்கைகளே விரட்டுவோம். செல்வோம் திசை எட்டும் கொணர்வோம் கலேச்செல்வம், புத்தகம் புதிய உலகு காண்போம், அதில் பூர்ப்பு எய்திய தமிழர்களேயும் அறியாமை, மடமை கோழாமை, பேதமை ஆதியன விரட்டிவிட்டு, எழுகவோர் புதிய உணர்வு- எய்துக தமிழர் தம் விடிவு மடிந்திடவறுமை நோய்கள். மாய்ந்திட நமது துன்பம் ஓங்குக தமிழர் மேன்மை உலகலாம் பரவி-வாழ்க்க.

—நன்றி நீதிமுரசு 1968.

## நாட்டின்...

(Vம் பக்கத்தொடர்ச்சி)

கிருேம் என்பதில் அர்த்தமேயில்லே. ஒருசிறு வித்தியாசம் அன்றி அன்னியர்களுக்கு அடிமைப்பட்டோம். இன்று அன்னிய மோகத்திற்கு-அன்னிய நாகரிகத்திற்கு அடிமைப்படுகிருேம், என்று தான் கூறவேண்டும்.

எனவே சுதந்திரமடைந்த பிறகாவது எமது நிலேயைச் சிந்தித்து எம் தாய்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப்பாடுபடுவோம் என்று சங்கற்பம் செய்து கொண்டு செயற்படுவோமாக.

## கடலில்...

I ம் பக்கத்தொடர்ச்சி

கடலாராய்ச்சி எனில் கடலே மட்டுமல்ல அதன் அடித்தளம்' அதன் அலே வாய்க்கரை அதன் மேலுள்ள வாயுமண்டலம் இவற்றையும் விஞ்ஞான முறைப்படி ஆராய்வதாகும்.

கடலடியைத் துளேத்துப் பெட்ரோலியமும் இயற்கை வாயுவும் எடுப்பது மட்டுமன்றி கடலின் நீரிலிருந்தும் எத்தனேயோ ரசாயனப் பொருட்களேப் பிரித்தெடுக்க முடியும்.

உள்ளூர் மின்தறியில் தயாரிக்கப்பட்ட தரமான, நேர்த்தியான சாரிகள். ரவுக்கைத்துணிகள், பாவாடைத்துணிகள், பட்டுவேட்டி, சால்வைகள், காற்சட்டைத் துணிகளைத் தயாரிப்பவர்கள்!

வலிமேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்

சங்கானை, தொலைபேசி: 525. மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org